செந்தமிழ்

மலர் 4 இதழ் 2

பெப்ருவரி 1954

JL
R34ஞN51
N54·4·2
182336

பகுத்தறிவு





JL
R34m N51
N54·4.2
182336

15-2-54. அணு 4

உங்களுக்கு நான்கு நெருங்கிய
நண்பர்கள் இருந்தால்
போதும்.

★

இரண்டே மாதத்தில்
ரூ. 32896 லாபமடையலாம்.

★

விபரங்களுக்கு 2 அணா ஸ்டாம்புடன்
எழுதுக

அழகி பதிப்பகம்,
27-28 உள்தெரு,
விருதுநகர்.

"ரதி" யின் முத்திரை பதித்த
புதிய புத்தகங்கள்.

விருதை, ந. இராமசாமி
தீட்டிய, தி மு. கழக தேன்
சொட்டும் ஏடுகள்.

திராவிடத்திலே தீ	0 4 0
தி. மு. க வின் ரத்தபலி	0 4 0
ஆக்குமேடையிலே அண்ணா	0 4 0
தம்பிக்குச் சவால்	0 4 0
லட்சியப் பாதையிலே தி. மு. க.	1 0 0

ஏஜண்டுகள்—அவர்களின் ஏஜன்ஸி
கமிஷன், விசேட சலுகைகள்,
விபரக் காட்லாக்கிற்கு எழுதவும்.

ரதிப் பதிப்பகம்,
127, தெற்காவணி மூல வீதி,
மதுரை.

Tel: PAANA. Phone: 83.

கைதேர்ந்த ஆட்களால், எங்கள் நேர்பார்வை
யில் சொந்த பாக்டரியில் தயாராகும் வெங்
கலம், பித்தளை, செம்பு அலுமினியப் பாத்தி
ரங்கள் உழைப்பிற்கும், உறுதிக்கும் உத்தர
வாதமுள்ளவை.

★

V. O. V. பழனிச்சாமி & சன்ஸ்,
வெங்கலப் பாத்திரம், அலுமினியம் &
எவர்சில்வர் வியாபாரம்,
72, பெ. சி. சிதம்பர நாடார் தெரு,
விருதுநகர்.

பகுத்தறிவு
பொருளாட்சி

ஆசிரியர் ப. கண்ணன்.

இரத்த வெள்ளம் "ரவி" ... 2
குப்பனோ-கோமகனோ! [illegible] ... 3
நடப்பும் கருத்தும் 5
தலைசிறந்த பகுத்தறிவாளரின் [illegible]
S. ராமதுரை M. A. B. L. ... 7
எதிரொலி "முரசு" ... 8
தீர்ப்புத்தாருங்கள் விருதை, ந. இராமசாமி ... 9
உலக இலக்கியம் மூலம், மாக்சிம் கார்க்கி
தமிழில்: 'டேவிட்' ... 15
எரிக புரட்சித் தீ! பாவலர். தெ. ப. வேலாயுதசாமி... 19
ஆதிரை (ரேடியோ நாடகம்) ப. கண்ணன் ... 23
சிரிக்காதே! 27
கோமளம் "அமரன்" ... 29
மனோதத்துவ விளக்கத்திற்கான சில வினாக்களும்
விடைகளும் ஆல்பர்ட் எட்வர்ட் விகாம் ... 31
மலர் மணம் 35
பேரறிஞர், எம். என். ராய் (வரலாறு) ... 37
பொன் மொழிகள் 40
சத்தியமறையின் தப்பரைகள்
ஆசிரியர்: எ. மெத்தூசலா ... 41
செம்பவளம் (தொடர்கதை) ப. கண்ணன் ... 43
கலைக்கூடம் 47
கருத்துரை 50

வள்ளுவராண்டு 1985. திங்கள் 2.

மலர் 4. விஜய-மாசி. இதழ் 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 FEB 1954
MADRAS

182336

இரத்த வெள்ளம்.

—ரவி—

சேக்கர் ஒளியில் படிந்ததனுல்-ஊற்று
சென்னிறங் கொண்டதென் றெண்ணிடுங்கால்-ஓர்
திக்கிலா ஏழைதன் தேகத்திலே-ரத்தம்
கக்கிடும் காட்சியைக் கண்டு நின்றேன்!

வானப் பிறையின் உருக்கண்டுநான்-எட்டி
வாங்கிடக் கையினை நீட்டியதும்-கொடுர்
ஈனச் செயலால் உயிர்வதைக்கும்-வாளின்
இரத்தக் கேடயம் கைப் பிடித்தேன்!

தாமரை யின்மலர்க் கண்டதுமே-நான்
தாவினேன் ஆசையினுல் பறிக்க-அந்தோ
பூமரை யல்லவோர் பொற்குழவி-உள்ளம்
போகுங்க வெட்டுண்ட தலைகண்டேன்!

கடவுள் ஒருவன் உண்டெனிலோ-இந்த
கர்மங்கள் கேடுகள் செய்திடவோ?-பக்தி
மடமை நஞ்சாலே மக்கள்தமை-கொல்ல
முந்தினுல் நாமதைக் கொன்றிடுவோம்.

அட்டைப் படம்.

காலஞ்சென்ற தமிழறிஞர், சேலம் பிரின்சிபால் ஏ. இராமசாமி M. A. L. T. அவர்கள். அடுத்த இதழில் இவரது வரலாறு வருகின்றது.

பகுத்தறிவு

கும்பமேளா - கொலைக்களம்!

கோயில், குளம், தீர்த்தங்கள் புனிதமானவை, மக்களின் எந்தப் பாபங்களையும் போக்கி, 'மோட்ச லோக சாம்ராஜ்யத்தையளிக்கும் மகத்துவம் வாய்ந்தவை. இந்த நம்பிக்கை,மற்ற மதத்தாரைக்காட்டிலும் இந்து மதத்தாருக்கு அதிகம், தென்னாட்டவரைக் காட்டிலும் வடநாட்டவருக்கு மிகமிக அதிகம். அந்த மூடநம்பிக்கையின் பயனாக, பண்டித ஜவகர்லால் நேருவின் பிறப்பிடமாகிய அலகாபாத்துக்கருகே கும்பநகரில் நடைபெற்ற கோர நிகழ்ச்சியினைக் கேட்டு உலகம் நகைக்கின்றது! "ஐயகோ! இதுவா மனிதப் பண்பு?" என்று அறிவு உலகம் கண்ணீர் வடிக்கின்றது!

கங்கை, யமுனை ஆகிய இரு நதிகளும் சந்திக்கும் பிரயாகையில், 12. ஆண்டுகளுக்கொருமுறை, சரஸ்வதி என்ற நதியொன்று கண்களுக்குப் புலப்படாமல் வந்துகலப்பதாக ஐதிகம்; நம்பிக்கை, அந்நாளிலே பிரயாகை கூடலில் மூழ்கியெழுந்தவர்கள் பாபங்களெல்லாம் கழுவப்பட்டு, புண்ணியாத்மாக்களாக மாறி,மோட்சத்திற்குத் தகுதியைப் பெற்று விடுகின்றனராம்! இது தமிழ்நாட்டிலே கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத்தைப் போன்று, 12. ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் வடநாட்டுப் பெருவிழா; கும்பமேளா.

இம்முறை 3—2—54-ல் நடைபெற்ற கும்பமேளா ஒரு தனிச் சிறப்புக்குரியதாம், சூரியன், சந்திரன், குரு ஆகிய மூன்று கிரகங்களும்சிறப்பான இடத்தைப் பெற்றார்களாம், நூறு ஆண்டுகளுக்குப் பிறகே இம்மாதிரி அரிய வாய்ப்பு கிடைத்ததாம்! இந்த அபூர்வ வாய்ப்பு, புண்ணியம், மகத்துவம் பற்றி வடநாடெங்கும் பிரசாரம்—விளம்பரம் செய்யப்பட்டன. அதை நம்பி பாபத்தைக் கழுவி, புண்ணியத்தைப்

பூசிக்கொள்ளப் புறப்பட்டு விட்டனர் சுமார் 35, லட்சம் இந்து மதப் பாபிகள்; பெண்டு பிள்ளை குடும்பத்தோடு!

மதச்சார்பற்ற ஆட்சிபீடமேறியுள்ள ஆளவந்தார், கும்பமேளாவிலே குறைவற்ற ஆர்வம காட்டினர். "குடியரசுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத் குடும்பத்தோடுகுளிக்க வருகிறார், நேரு நீராடுவார், கவர்னர் முன்ஷி இன்று காலையே வருகிறார்!" என்பன போன்ற விளம்பரங்கள் — விசேஷச் செய்திகள் பறந்தன, பத்திரிகைகள் பிரசுரித்தன பெருமையோடு! என்ன நடந்தது?

படித்தவன், படிக்காதவன்—மந்திரி, சாதாரண மனிதன்—தலைவன், தொண்டன்-ஆண், பெண்-கிழவன், குழந்தை எல்லோரும் லட்சக்கணக்கிலே 3-2—54 விடியற்காலையில், கடுங்குளிரையும பொருட்படுத்தாமல் பிரயாகையில் குளிக்கத் திரண்டனர். கட்டுக்கடங்காத பக்தர் கூட்டம், நாகசாதுக்களின் நிர்வாண ஊர்வலம், அவர்களிடம் புண்ணியந்தேடப் பெண்களின் ஆவல், நெரிசல்,நெருக்கடி சாதுக்களின் கோபவேசம், குத்து, வெட்டு, உதை, அடிதடி, ரகளை! இவற்றின் விளைவால், கையிழந்தவர் காலிழந்தவர் பலநூறுவர், மிதிபட்டுக்கசங்கி, உருத்தெரியாது மாண்ட ஆண், பெண், குழந்தைகள் பலநூறுவர்! நினைக்கமுடியாத கோரக்காட்சி. கும்பமேளா கொலைக்களமாய் விட்டது! இது ஒரு நாட்டிற்குப் பெருமைதரும நிகழ்ச்சியா? பகவானும், பக்தியும்,தீர்த்தமும் மக்களை இப்படி அறிவிலிகளாய், ஆடுமாடுகளாய், காட்டு மிராண்டிகளாய், சுயநலச் சோம்பேறிகளாய் ஆக்குவதைத்தவிர வேறு என்ன நன்மைகளைச் சாதித்துள்ளன?

இதுவரை கும்பமேளாவுக்கு 11-லட்சத்திற்குமேல் பக்தர்கள் வந்ததில்லை. இந்த மேளாவுக்கு வந்தவர் சுமார் 35 லட்சமாம். சென்ற மேளாவின் செலவு $6\frac{1}{2}$ லட்சம் ரூபா. இந்த மேளாவுக்கு இதுவரை ஆன செலவு 42 லட்சம், மத்திய சர்க்கார் சுமார் 10 லட்சம் வரை தருவார்களாம், உத்தரப் பிரதேச சட்டசபையில் 12—2—54-ல் உள்நாட்டு மந்திரி,சம்பூர்ணானந் வெளியிடுகிறார் இத்தகவலை, நேர்மைதானா? நியாயம்தானா தோழர்களே? அறிவுகெட்ட இந்த வடநாட்டுக் காட்டு மிராண்டிகளோடு இனியும் நாம் ஒட்டிக் கொண்டிருக்கலாமா? சொல்லுங்கள்,

—ø—

நடப்பும் கருத்தும்

மறைந்த பேரறிஞர்

இந்தியப் பகுத்தறிவுக் கழகத்தின் தலைவர்களில், உலகப் பேரறிஞர் எம். என். ராய் சென்ற 25—1—54-ல் டேராடூனில் அவரது இல்லத்திலே இயற்கை முடிவெய்தினர் என்ற செய்தியறிந்து திடுக்கிட்டோம்; திகைத்தோம்.

நெடிய தோற்றம், வலிவும், வனப்புமான உடற்கட்டு, அகன்ற நெற்றி, அருட்பார்வை, ஆழ்ந்தகன்ற கருத்திலே விளைந்த கனிவுப் பேச்சு, இத்தகைய சிறப்பியல்புகளைப் பெற்ற அறிஞர் ராய், இந்தியத் தலைவர்களுடைய பெருமைப் படத்தக்க அருபணிகளைப் புரிந்தவர். சாதி மத பேதங்கடந்த செயல் வீரர். உலக அரசியல் அரங்கிலே, அறிவும், ஆற்றலும் மிக்க புரட்சித் தலைவராக விளங்கியவர். அவரது வரலாறு, இளைஞர்களுக்கு நல்ல பாடம். அவரது கருத்துக்கள் புதுமை வழிகாட்டி, அவரது நூல்கள் பகுத்தறிவுப் பெட்டகங்கள். நிரந்தரங்கள் என்றும் சாகாதவை!

1940-ல் அறிஞர் ராய், [illegible] கட்சியைத் துவக்கிய போது அவரது துணைவியார், எலன் ராயோடு தமிழகம் வந்து, பெரியார், ஈ. வே. ரா. அவர்களோடு சுற்றுப்பிரயாணம் செய்து பல பல கூட்டங்களிலே சொற்பொழிவாற்றினர். சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை அப்படியே பிரதிபலித்தன அவரது பேச்சுக்கள். இந்தியப் பகுத்தறிவுக் கழகத்திலே அவர் கொண்டிருந்த தொடர்பு, பல புதுமைகளை நல்குமென்று எதிர்பார்த்திருந்தோம். மறைந்துவிட்டார் அறிஞர் ராய், மனமுருகி வருந்துகிறோம். எனினும் அவரது கருத்துக்களும், உழைப்பும், எதிர்காலப் பகுத்தறிவு உலகைப் படைப்பதற்கு நல்ல ஆயுதங்களாகும். அதனைப் போற்றுவோமாக

கல்வி ஒழிப்பு

ஒரு நேரப் படிப்பு தரும் ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித்திட்டம், வரும் ஜூன் மாதத்திலிருந்து கிராமங்களிலும் அமுலாக்கப்படுமாம். அதன் கேடுகளை எத்தனையோ வகையில், எவரெவர் எடுத்துச் சொல்லியும், கிளர்ச்சி செய்தும், நடைமுறையில் தோல்வியென்பது தெரிந்தும் "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்" என்பதை மெய்ப்பிப்பது போல், நாட்டுப்புறங்களுக்கு மட்டுமல்ல, [illegible] கேட்டினை விரிவாக்குகிறார் ஆச்சாரியார்.

டெல்லியில் 8—2—54-ல் கூடிய மத்திய கல்வி ஆலோசக போர்டு இத்திட்டத்தினை அலசிப் பார்த்து,முடிவு கூறிவிட்டது; "இது வரவேற்கத் தக்க முயற்சிதான். எனினும் நீடித்த நடவடிக்கை என்ற நிலையில்தான் மதிப்புக்குரியது. நாட்டிற்கு உகந்தது ஆதாரக்கல்விதான். இது போன்ற பரீட்சார்த்த திட்டங்களை பள்ளிக்கு வெளியே, சிறுவர் கல்வியின் முக்கியப் பகுதியை, கட்டுப்பட்டு உட்பட்ட நற்றிணையில் நடத்துமாறு இதர ராஜ்யங்களுக்கும் போர்டு யோசனை செய்கிறது"

இந்த முடிவு ஆச்சாரியாருக்கு ஆதரவானதன்று. இது காட்டுவ

தலைசிறந்த பகுத்தறிவாளரின் மறைவு

S. ராமநாதன் M. A. B. L.

தோழர் எம். என். ராயின் மறைவால், உலகம் அறிவையும், முற்போக்கு உணர்ச்சியையும் மக்களிடையே பரப்பிய, சலியா உழைப்புடைய ஓர் சிந்தனைச் சிற்பியை இழந்துவிட்டது! அவருடைய வாழ்வு பலமாறுதல்களைக் கொண்டது. இளமையில் புரட்சிவாதியாக இருந்தகால், கம்யூனிஸ்ட் ரஷ்யாவைக் கட்டியாளும் ஆளவந்தாரின் அந்தஸ்தைப் பெற்றார். புகழுடன் அவர் திருப்தியடைந்திருப்பாராயின் உலகத்தின் ஓர் இடத்திலே, ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ, அல்லது ஆசியாவிலோ ஆட்சிபீடத்திலே இருந்து இறந்திருப்பார். ஓய்வில்லாத ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவராக இருந்தமையால், பொய்யை மறுத்துப் போராடி, உண்மையை இடைவிடாது ஆராய்ந்து தேடிக் கண்டுபிடிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கம்யூனிஸப் பாசறையினின்றும் நீங்கிய பொழுது, அவர் கம்யூனிஸத்திற்கு எதிராக எடுத்துக்காட்டிய காரணங்கள், இன்று உலக மக்களால் உண்மை என்று ஒப்புக்கொள்ளப்படுகின்றன. இதைப்போலவே அவர் சில காலம் இருந்து பணியாற்றி, பிறகு உதறித்தள்ளிய காங்கிரஸின் சர்வாதிகார மனப்பான்மையை அப்பொழுதே எடுத்துக்காட்டிய, இவரது தீர்க்கதரிசனத்தை நாம் இன்று நன்கு உணருகிறோம். இவரது உண்மையின் ஆதாரங்களை மக்கள் புரிந்துகொள்ள இயலாததாலும், தலைவர்களைக் கடவுள்களாக்கி வணங்கும் தன்மை பாமரமக்களிடம் மலிந்திருப்பதாலும் ஓர் புது அரசியல் கட்சியை அவரால் ஏற்படுத்த முயன்றும், முடியவில்லை. அவர் உண்மைப்பாதையில் சென்றும், தன் இலட்சியத்தில் வெற்றி பெறாதது துடைக்கமுடியாத துன்பமாகும். அவரது வாழ்க்கையும், அவர் அடைந்த இன்னல்களும் இந்தக் காலத்திற்கும், மக்களுக்கும் ஓர் தீர்ப்பாகும். அவர் மறைவானது; பகுத்தறிவு ஓர் நெருப்புப் பொறி, அது உலகத்திற்கு ஒளியை உண்டுபண்ண—பற்றி எரிய— ஓர் அனுகூலமான சூழ்நிலையை எதிர்நோக்கி இருக்கிறது என்பதை நமக்கு நினைவுறுத்துவதாகும்

—இந்தியன் ரேஷனலிஸ்ட்

எதிரொலி.

"முரசு"

★

புதிய கல்வித்திட்டம் ஜூன் மாதம் முதல் எல்லா நகரங்களிலும் அமுலாக்கப்படும்:

—செய்தி.

சபாஷ்! பிள்ளைகளின் கல்விக் கண்ணைக் குருடாக்கும் பெரும்பணியில், படிப்பு—படிக்காது என்ற ஒரு பேதம் ஒழிந்தது!

* * *

கோவை மக்கள் தினந்தோறும் 10 லட்சம் பீடி குடிக்கிறார்கள்.

—செய்தி.

லட்சாதிபதிகள் சங்கதி!

* * *

ஜனங்கள் செத்து மடிந்தபோது அரசாங்கத்தினர் சங்கீதக் கச்சேரியுடன், உல்லாச விருந்துண்டனர்.

—[illegible] செய்தி.

இவர்களென்ன! இவர்களைப் படைத்த ஆண்டவனே இப்படித் தானே இருந்திருப்பான்!

* * *

ராஜாஜி சர்க்கார் பிடிவாதமாக அரிஜனங்களின் உரிமையை மறுக்கிறது:

—சாமி-சகஜானந்தா M. L. A.

பொதுஜனங்கள் உரிமையே பறிபோகும்போது, அரிஜனங்கள் மட்டுமென்னவாம்!

* * *

சங்கராச்சாரியார் படித்தவர் தானே! அவர் வேலை கேட்கிறாரா?

—ஆச்சாரியார்.

பண்டிதர்களை மடையர்களாக்கி, தாண்டிக் கொழுப்பேறிய படிப்பும் வேலையுமாகி விட்டபிறகு, வேறென்ன வேண்டும் அவருக்கு?

* * *

வேதத்தின் முடிவை ஆட்சேபிப்பவர் யாரும் இந்துவாக இருக்கமுடியாது

—எம் எஸ் பி ஐயர்.

ஆனால், வேத விதிகளுக்குப் புறம்பாக நடப்பவர்கள் யாரும் இந்துவாக இருப்பதில் ஆட்சேபணையில்லை.

* * *

துரதிர்ஷ்டவசமாக குடும்பங்களில் மதவழிபாடு மறைந்து விட்டது, மதத்திலும் நம்பிக்கை இழந்து விட்டோம். பள்ளிக்கூடங்கள் மதச் சார்பற்றவைகளாகி விட்டன!

—ஆச்சாரியார்.

மக்களைக்காக்கவும், பரப்பவும் தானே மதம்பிடித்த ஆச்சாரியார் பள்ளிக்கூடங்களை மடையர் உற்பத்திச்சாலையாக்குகிறார்!

* * *

ஸ்திர சர்க்காரை அமைக்கவல்லது காங்கிரஸ் ஒன்றே.

—ஜவஹர்லால்.

ஏனென்றால், ஸ்திரமான கேடுகளைச் செய்ய அவர்களால்தான் முடியும்.

* * *

இவ்வாண்டு, மத்திய சர்க்கார் ரூபா 65 லட்சம் மதிப்புள்ள கதருக்கு ஆர்டர் கொடுத்துள்ளனர்.

—செய்தி.

கைத்தறித்துணி விற்பனைக்கு தீவிரப் பிரசாரம் செய்வார்களாம்! வாங்க மாட்டார்கள்!

தீர்ப்புத் தாருங்கள்.

விருதை, ந. இராமசாமி.

Ø

உழவு செய்யப்பட்ட நிலம்போல, வானம் காட்சி தந்தது—மேகத்திரள்கள் பாத்திகளைப்போல வரிசை தவறாமல் கிடந்தன — அவைகள் மீது மின்னல் [illegible] பட்டு [illegible] ஒரு நிலை!

வானவெளியின் விசித்திரக் காட்சியை ஜன்னல் வழியாகப் பார்ப்பதும்—குறுக்கு நெடுக்குமாய் அறையில் உலாவுதுமாக இருந்தார் காரிமேகம். நள்ளிரவைக் கடந்தும் கூட இன்னமும் அவருடைய சிந்தனைப்புயல் ஓய்ந்தபாடில்லை.

சிகரத்திலே விடைபடக்கூடிய சிந்தனைச் சிக்கலா அது?

* * *

காரிமேகம் ஊருக்குப் பெரிய மனிதர். செல்வம் தேடித்தந்த செல்வாக்கு—[illegible] சம்பாதித்துக் கொடுத்த புகழ்—[illegible] தந்த கீர்த்திக்கும் பெருமை—அவர் அவ்வூர் பஞ்சாயத்து மன்றத்தின் நீண்டகாலத் தலைவர். அவரில்லையென்றால் நல்ல தீர்ப்புவழங்குவதில் நேர்மையாளர் யார் என்று அந்த வட்டாரத்திலே யாரைக் கேட்டாலும், "காரிமேகம் தான்" என்று ஒரே வரியில் பதில்சொல்லி விடுவார்கள்.

'[illegible]' பார்வையில் மட்டுமல்ல நடைமுறையிலும், கலைப்பதிலும் அபாரம் என்று யாராவது எடுத்துக்கூற வேண்டுமா என்ன? அன்று அவரிடம் ஒரு வழக்கு, விசாரணைக்காக வந்தது. அவ்வழக்கை விசாரித்து அறிந்ததன்பின்பு தீர்ப்பு வழங்க வேண்டிய கட்டம்!

சட்டப்படி குற்றவாளி எனக் கூறி, அதற்குரிய தண்டனையை—தீர்ப்பை உடனே தூக்கி எறிந்து விட்டு எழுந்துபோக இது அரசாங்க நீதிமன்றமல்ல!—நாட்டுப் பஞ்சாயத்துக் கூட்டம்—இங்கே [illegible]!—நீதிக்கு ஒவ்வாத தீர்ப்பை அளிப்பின், ஊர்மக்கள் [illegible] விதமாக நிந்தித்திருப்பது மட்டுமல்ல "நீ விளக்குவயா நடுவராய் போறவனே!" என்று மனக்குமுறி [illegible] இறைத்து விட்டுப் போவர்!

ஆகவே, தீர்ப்புத்தரவேண்டிய இக்கட்டான நேரத்திலே "நாளைக்குத் தீர்ப்புச் சொல்கிறேன்" எனக் கூறிவிட்டு எழுந்துவந்துவிட்டார்.

இரவு ஆகாரம் கூட எடுத்துக் கொள்ள ஆர்வமில்லை அவருக்கு. உணவுடன் உறக்கமும் செல்லாமலேயே [illegible]. மயான அமைதி நிலவும் அந்த நிசப்தமான நடுச்சாமம் வரை கண் விழித்திருந்தார். படுக்கையில் சிறிதுநேரம் சாய்ந்திருப்பார்—எழுந்திருப்பார் அடுத்து—அறையில்

இங்கும் அங்கும் நடமாடுவார். என்ன தான் முயன்றாலும் சிந்தனை தன் போக்கிலேயே விரிவடைந்து, புதுப் புது புதிர்களை விளைவிக்கிறதேதவிர, தீர்ப்புக்குரிய திட்டவட்டமான முடிவுக்கு வர இயலவில்லை.

வழக்கின் தரமும் போக்கும் உண்மையாகவே சிக்கலானதல்ல!— இருப்பினும் தீர்ப்பு வழங்க அஞ்சினார் கார்மேகம்! தன்னையே—தன் வார்த்தையே குறியாகக் கொண்டு அந்தத் தீர்ப்பு சுற்றிச் சுற்றிச் சுழல்வதாக உணர்ந்தார்—உடல் நடுங்கினார்-உருக்குலைந்து போனார்.

* * *

மகமாயி—வழக்கில்வாதி. கார்மேகத்திடம் நீதிவேண்டி அவர் முன்னிலையில் வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறாள்.

பிச்சையப்பா—வழக்கில் பிரதிவாதி. தன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு தக்கமறுப்பு தாக்கல் செய்திருக்கிறான் அவன்.

வழக்கு இதுதான்: மகமாயி, பிச்சையப்பாவின் மனைவி. ஊரார் அறிய தாலி கட்டிய துணைவி. ஆனால் இன்றல்ல பதினாறு ஆண்டுகட்குமுன்பு. இருவரும் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். ஒரு ஆண் மகவையும் பிள்ளைக்கனி அமுதாகப் பெற்று மகிழ்ந்தனர். வாழ்க்கைத் தோணி இன்பக்கடலில் லளிதமாய் மிதந்து செல்வதாகவே ஊரார் எண்ணினர். பரந்து கிடக்கும் கடலோ தனது நெஞ்சக் குமுறலை அலைகளாகப் பெருக்கிக்காட்டி விடுகிறது! அதுபோலவே, மனிதர்களும் இருக்க வேண்டுமென்பது எதாவது கட்டாயமா என்ன!

எல்லாருமே இதயத்தவிப்பை பிறர் அறியும்படி காட்டிக் கொள்வதில்லை! உள்ளுக்குள்ளே உறுத்திக்கொண்டிருக்க கொடு முள்ளின் கூர்மை—அது தரும் உபத்திரவம் — அனுபவிக்கிறவர்களுக்கல்லவா தெரியும்!

காலில் தைத்திருந்தாலும் சிந்திச் சிந்தி நடக்கும்போது பிறர்கண்டு கொள்வர்— இது இதயத்தின் ஆழத்திலே எங்கோ வொரு மூலையில் தைத்தமுள்!

வெளி உலகத்தாரின் பார்வைக்கு இணைபிரியா இல்லறக்குயிலிணையாக இன்னிசை பாடுவதைப்போல தோற்றமளித்தனர், பிச்சையப்பாவும்-மகமாயியும். ஆனால், வெகு நாட்கள் ஆகவில்லை, வெளி உலகத்தாரும் உண்மையைப் புரிந்து கொள்ள.

பிச்சையப்பா என்றைக்கோ தெரிந்துகொண்ட விஷயமே இது!- மற்றவர்களுக்குத் தெரிந்தால் பெரும்பழி வந்து விடுமே என்பதற்காக பொறுமையை வருவித்துக் கொண்டான்.

என்றாலும் கூட, ஒருநாள் மூடி மறைக்கப்பட்ட செய்தி வாணவெடி போல வெடித்து சகலருடைய கண்களிலும் பட்டுவிட்டது.

மற்றொரு நாள் மகமாயி காணாமற் போய்விட்டாள் என்ற செய்தி ஊரெங்கும் பரவிற்று!

குளம்—குட்டை—கிணறு ஆகியவற்றில் ஒன்றைக்கூட விட்டுவைக்கவில்லை சுற்றத்தார். அலசி அலசித் தேடினர், மகமாயிக்குச் சொந்தமென்று சொல்லப்படுபவர். எங்கு

தேடியும் அவள் அகப்படவில்லை. போனதிசை எது என்ற புலன் கூடத் தென்படவில்லை.

இவர்களெல்லாம் இவ்வளவு அக்கறையுடன் மகமாயியைத் தேடித் திரிந்தபோது கட்டிய கணவன் பிச்சையப்பா கொஞ்சங்கூடக் கலங்காமல் கற்சிலை மாதிரி இருந்தான்! அந்த மர்மம் அவனுக்கல்லவா தெரியும்?

அடுத்தநாள் அதுவும் ஊரார் காதுகளுக்கு எட்டத்தான் செய்தது. பக்கத்து வீட்டிலே குடியிருந்த பால்சாமி என்ற பள்ளிக்கூடத்துப் பையனை மகமாயி கூட்டிக்கொண்டு ஓடிவிட்டாள்!

இச்செய்தியைக்கேட்ட ஊரார் திடுக்கிட்டனர். பிச்சையப்பா சர்வ சதாரணமாகவே இருந்தான். "அடிபாவி!-தங்கமான புருஷனுக்கு இப்படி துரோகம் செய்துட்டுப் போயிட்டாளே!" என்று அங்கலாய்த்தனர் அனைவரும். அவனோ எல்லாமுணர்ந்த ஞானியாக வீற்றிருந்தான்!

மகமாயி—பால்சாமி தொடர்பு அவனுக்கு நெடுநாட்களுக்குமுன்பே தெரியும். கண்டித்துப் பார்த்தான்... ......தண்டித்துப்பார்த்தான். எவ்வளவோ அடக்கி ஒடுக்கியும் மனைவியைக் கட்டுப்படுத்தியும் பார்த்தான். கடுகளவுகூட அவனது கண்டிப்புக்கு பலன் கிட்டவில்லை. கடைசியில் குழந்தையையும் கூட்டிக் கொண்டு பால்சாமியோடு ஓடிவிட்டாள். இதை எதிர்பார்த்தவன்தான் பிச்சையப்பா. ஆகவே ஆச்சரியமோ அதிர்ச்சியோ அடைந்தானில்லை.

காலக் கீறிவிட்டுப்போன இந்த களங்கக்குறிப்புக்குப் பின்பு பதினாறு ஆண்டுகள் உருண்டுவிட்டன.

* * *

இப்போது பிச்சையப்பா இரண்டாந்தாரமாக இசக்கியைக் கட்டிக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்தான். இந்நிலையில், இந்த நிம்மதியான வாழ்வுக்குக் குறுக்கே வந்து நிற்கிறாள் மகமாயி. தகப்பனுக்குள்ள சொத்து-சுகத்திலே தன் மகனுக்குரிய பங்கைத்தரவேண்டும் என்பதுதான் மகமாயி வேண்டுகோள்.

ஓடிப்போனவள் மகனுக்கு கால் காசுகூட தரமுடியாது என்பது பிச்சையப்பாவின் தாவா.

இவ்வழக்கைத் தீர்த்து வைப்பதில் தான் திணறுகிறார் கார்மேகம்.

பையன் பிச்சையப்பாவுக்கு பிறந்தவன்தான் என்பது அப்பழுக்கற்ற உண்மை. அப்படியானால் தகப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் மகனுக்கும் பங்குண்டு. ஆனால் விவஸ்தை கெட்டு பள்ளிமாணவனோடு ஓடிப்போய், அவனை கைவிட்டு ஊர் ஊராக அலைந்து திரிந்து இன்று கைதேர்ந்த விபச்சாரியாக வந்திருக்கும் மகமாயியோடு வாழ்ந்து வருகிற மகனுக்கு தன் சொத்துக்களைக் கொடுத்து சீரழிந்த நான் ஒருக்காலும் இசைய மாட்டேன்—என்ற பிச்சையப்பாவின் வாதத்தையும் தள்ளிவிடக்கூடாது.

தாயையும்-மகனையும் பிரித்து விடுவது-தகப்பனோடு மகனைச் சேர்த்துவைப்பது- சொத்துக்களின் ஒருபாதியை அவனுக்கு எழுதி விடு

வது—என்ற ஏற்பாட்டுக்கு வருவதானால் மகமாயி மறுக்கிறாள். மேலும்,

அவள் அறிவிழந்து—மானத்தையும் துறந்து—விதி வீதியாக விபச்சார வாழ்க்கை வாழ்ந்து—இன்று உலக நோய்களின் கூட்டுச்சரக்காக உருமாறி ஒருவாய் சோற்றுக்கும் வழியில்லாமல் வந்து நிற்கிறாள்—மகனுக்குக் கிடைக்கப்போகும் சொத்துமூலமாக சிறிது காலம் தனது கடைசிகால வாழ்வை நிம்மதியாகக் கழித்துவிட முடியாதா என ஏங்கி நிற்கிறாள்.

இந்த நிலையில் அவளை ஆதரவற்ற முறையில் அடித்துத்துரத்துவது அநியாயமென கார்மேகம் கருதினார்.

மகனுடைய அபிப்பிராயத்தையும் அறிந்து கொண்டார். நிறையப் பணம்—நிலம் புலம் கிடைக்குமென்றவுடனே இத்தனை நாட்களாக தன்னை ஆளாக்க எத்தனையோ துயரங்களை அனுபவித்த தாயாரையும் விட்டு விலகிவிட தயாராக இருக்கிறான் அந்த மகன். இது தீர்ப்புக்கு எளிதான சூழ்நிலை சாதகமான வழி.

அப்படியானால், அவள் கதி என்ன?—இந்த இடத்திலேதான் உலக நீதியைக் கொலைசெய்து—மனச்சாட்சியைச் சாகடித்து ஒரு பெண்பாவத்திற்கு ஆளாக அஞ்சினார் கார்மேகம்.

இவ்வளவு சொத்துக்களில் ஒரு சிறு பகுதியை அபலையாக நிற்கும் அவளுக்கும் கொடுப்பதால், குறைந்து போகமாட்டான் பிச்சையப்பா... அவன் செய்த தவறுக்குத் தண்டனையாக தீராத வியாதியைத் தான் பெற்றிருக்கிறாளே!—அதுவே போதும். இனியும் அவளை காயினுக் கேடாக்குவது நியாயமல்ல—இதுவே கார்மேகத்தின் கருத்து.

இதனால்தான் சிந்தனையிலே மூழ்கி விடை கிடைக்காமல் இரவைப் பகலாக்கிக்கொண்டார். இறுதியில் தன்னையும் மீறிய அசதியால் உடல் தளர்ந்து சற்று கண்ணயர்ந்தார்.

* * *

பொழுது புலர்ந்தது — புரண்டெழுந்தவர் சோம்பல் முறித்த வேகம், ஏதோவொரு முடிவிற்கு வந்து விட்டார் என்பதையே காட்டிற்று!

அவருடைய மகன்—சங்கரன் புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தான். தகப்பனார் பஞ்சாயத்து சபைக்கு புறப்பட ஆயத்தமானார், அப்போது அவரிடமே கேட்டு தீர்ப்பு விவரம் அறிய விரும்பினான் சங்கரன்.

“என்னப்பா சொல்லப்போறீங்க?”

“மகமாயிக்கு ஏதாவது கொடுக்கச் சொல்லணும்; இல்லே, மகனுக்கு சொத்துக்களை வாங்கிக் கொடுத்து எப்பவும் போலவே மகனையும் தாயையும் ஒன்றாகவே இருக்கச் சொல்லிடணும்.”

“சின்னப்பயலோட ஓடிப்போனவன் பேரிலே உங்களுக்கு ஏய்ப்பா இவ்வளவு இரக்கம்!”

“மனுஷனுக்கு இருக்க வேண்டிய நியாயமான இரக்கம் இதுதாம்பா! ஒரு பிள்ளையைத் தகப்பன் துணையில்லாமே தாய் வளர்க்கிற

துன்னு, லேசான காரியமில்லே! உதாரணமாக தாயில்லாத உன்னை நானே எவ்வளவு கஷ்டங்களுக்கிடையே வளர்த்து வருகிறேன்! இது மாதிரிதானே மகமாயியும் மகனை வளர்க்கக் கஷ்டப்பட்டிருப்பா! இன்னிக்கு சொத்துக்காக வேண்டி தாயையும் மகனையும் பிரிக்கக் கூடாது சங்கரா!”

தன் தந்தையாரின் தயாளகுணம், நியாயம் நிறைந்த மனம் இவற்றை எண்ணி எண்ணிப் பூரித்தான் சங்கரன்.

பஞ்சாயத்திலும் இதே தீர்ப்பு தான் வழங்கப்பட்டது. தாயும் மகனும் ஒன்றாகவே இருப்பது மகனுக்குரிய பங்கையும் ஒப்படைத்து விடுவது-என்றே தீர்ப்புக் கூறப்பட்டது.

இத்தீர்ப்பை எதிர்பார்க்கவே இல்லை பிச்சையப்பா—ஓடிப்போனவளுக்கு ஒரு பைசாக்கூட கிடைக்காது என்றுதான் ஊரேபேசிற்று. ஆனால் மகனும், சொத்தும் சேர்ந்தே கிடைக்கப் பெற்று வாழ்வடைந்தாள்!

* * *

“அவமானமென்பது வியாதியைப்போல, அது அவனவனுக்கு வந்தால்தானே தெரியும்!”

மனம் பொறுமிய பிச்சையப்பா மறுநாளே காற்றென கருதிபாய்த் தான்—கருமமே கண்ணானார்.

மகமாயி பெற்ற மகனோடு வந்து நின்றாள் வழக்காட. ஆனால்......... இப்போது வந்திருப்பவள் தன்னந் தனியாக வந்திருக்கிறாள்!

மகமாயி சின்னப்பயலோடு ஓடியவள்! இவள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்த பெரிய பயலோடு ஓடிப் போனவள்!

சந்தர்ப்ப வசத்தால், உணர்ச்சி வயப்பட்டு வழுக்கி விழுந்த வனிதையரின் வரிசையில் இடம்பெற்றவள். ஆனால், மகனோ தகப்பனிடமே வளர்ந்து வருகிறான். இவளும் தவறை உணர்ந்து வாழ்வுப்பிச்சை வேண்டித்தான் வந்திருக்கிறாள். “வாழ்க்கைப்பட்ட நேரத்திலே என் தாய் வீட்டார் பூட்டி அனுப்பிய பொன் நகைகளையாவது திருப்பித் தரச் சொல்லுங்கள் என் கணவரை. அவற்றை விற்றேனும் பிழைத்துக் கொள்கிறேன்” என்று மன்றாடினாள்—இவள் பெயர் மீனாட்சி ஆனால் பிரதிவாதியோ......!

தவறியவள்தான்—விபச்சாரியாக வாழ்ந்தவள்தான் — ஆனால் அவள் என்தாய். உங்கள் சொத்து சுகமே வேண்டாம். தாயின் துயரத்தைத் தீர்க்க வேண்டியது தனயன் கடமை அவளைக் காப்பாற்றப் போகிறேன்—கடைசி காலத்திலாவது அவள் நிம்மதியாக வாழ்ந்து சாகட்டும்”-எனத் துடிக்கிறான் இதுவரை தந்தையிடமே வளர்ந்த மகன் சங்கரன்.

“மாட்டிக் கொண்டீரா மகானுபாவரே! இப்போது எப்படித் தீர்ப்பு வழங்கப் போகிறீர் பார்ப்போம்” எனக் கொக்கரிக்கிறான் பிச்சையப்பா.

“பிச்சையப்பாவின் வழக்கிற்கும் இதற்கும் வித்தியாசமே கிடையாது. ஆகவே அதே தீர்ப்புதான் இதற்கும் பொருந்தும்—மீனாட்சிக்கும் வாழ்வு

தரவேண்டியதுதான்'' இடித்துரைக்கிறான் பஞ்சாயத்தார்களுள் ஒருவன்.

கண்ணீர் மல்கி நிற்கிறார் கார்மேகம். அதிர்ச்சியால் அப்படியே அமர்ந்திருக்கிறார் அந்நிமான்! ஏனோ......? பஞ்சாயத்துத் தலைவராக தீர்ப்பு வழங்கும் தீனதயாளராக — வீற்றிருக்கும் கார்மேகமேதான் இவ்வழக்கில் பிரதிவாதி! இவர் மனைவிதான் மீனாட்சி—இவர்கள் இல்லற வாழ்வின் அச்சுப் பதிப்புதான் சங்கரன்; அப்பாவிடம் வளர்ந்தவன்.

இப்போது பிச்சையப்பா நிலையில் கார்மேகம்......! இரத்தம் சொட்டும் துயரத்தால் தவியாய்த் தவித்தார். எவருடைய இதயமும் புண்படாமல், தன் மகனும் வேதனைப்படாமல், மீனாட்சியின் வழக்கும் தோற்றுப் போய் விடாமல், குறிப்பாக தன் மனமும் இடிந்து சரிந்து விடாமல் எல்லாரும் ஏற்கும் நல்லதீர்ப்பு ஒன்று வழங்கவேண்டும்.

அந்தப்புனிதத் தீர்ப்பை 'பகுத்தறிவு' வாசகர்களிடமே ஒப்படைக்கிறேன். தீர்ப்புத் தாருங்கள்—''பகுத்தறிவு'' ஆசிரியர் வாயிலாக வாசகர்களின் தீர்ப்பைக்காண விழைகிறேன்.

பொருத்தமான தீர்ப்பாக—பகுத்தறிவுக்கு ஏற்ற தீர்ப்பாக—இருப்பின் அதுமட்டும் 'பகுத்தறிவில்'' இடம் பெறும்.

'விருதை. க. இராமசாமி, மேற்பார்வை ''பகுத்தறிவு'' சலகண்டபுரம், சேலம் மாவட்டம்' எனும் முகவரியிட்டு ஆர அமரச்சிந்தித்து தீர்ப்பு எழுதி அனுப்புங்கள். எங்கே பார்ப்போம் ''தீர்ப்புத் தாருங்கள்'' ØØØ

விற்பனையாகிறது!

★

உயர்ந்த கருத்துள்ள ஓரி வரிப் பாடல்கள் தொழிலாளர், செல்வர், ஆசிரியர், கவிஞர்கள், பெண்கள், மாணவர்கள். ஆட்சியாளர், தலைவர்கள் அனைவர்க்கும் ஓர் அறிவுறுத்தல். பழமொழி போன்ற பகுத்தறிவு மொழிகள்!

Ø

அழகிய புத்தகம்.

பக்கங்கள் 32 விலை 0-3-0

வாணிபர்க்குக் கழிவு 25%

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்
சலகண்டபுரம், :: சேலம் மாவட்டம்

உலக இலக்கியம்.

மூலம்: மாக்சிம் கார்க்கி, தமிழில்: 'டேவிட்'

●

இலக்கியம் உலகத்தின் இதயம், எல்லா இன்பதுன்பங்களும், கனவுகளும், எண்ணங்களும் நம்பிக்கைகளும், அவநம்பிக்கைகளும், கோபமும், இயற்கையின் அழகைப்பருகுவதால் ஏற்படும் மனிதனின் எண்ணங்களின் வர்ணஜாலங்களும், இயற்கையின் ரகசியத்தை நேருக்குநேர் நோக்குவதால் ஏற்படும் திகைப்பும், பயமும் இதற்குக் கருவூலமாக அமைகின்றன. இந்த இதயம அடங்காமல் — ஓய்வில்லாமல் சுய அறிவைப் பெற வேண்டுமென்ற ஆர்வத்தால் துடிதுடிக்கிறது. இலக்கியம் மனிதன் மனத்தின் ஆழத்தில் மண்டிக்கிடக்கும் அந்தரங்க எண்ணங்களை அறிய இயலுவதும், உலகத்திலுள்ளோர்எல்லோரும் பார்ப்பதற்கு இருப்பதுமான ஒரேகண் என்பதாக சிலர் கருதுகிறார்கள். ஒரு புத்தகம் நமக்கு எளிதாகவும், பரிச்சயமாகவும் இருந்தபோதிலும், அந்தப்புத்தகத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போமாயின், அது அவனியிலே பெரிதும் திகைப்படையச் செய்யும் அற்புதங்களில் ஒன்றாகும். பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவரும், நாம் சந்திக்கப்படாதவரும் ஆன ஒருவர், நமக்குப் புரியாத மொழியில் பேசுவது புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கும். அதை நாம் படித்து வார்த்தைகளில் உள்ள பொருளையும், கருத்துக்களையும், எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், அதில் உள்ள உருவங்களையும் புரிந்துகொள்ள இயல்வதோடு, இயற்கையின் வர்ணனைகளைப் பார்த்து மிகவும் ரசிக்கவும் முடிகிறது. சொற்களின் கட்டுக்கோப்பும், பேச்சின் அழகான அமைப்பும், நடையும், புத்தகத்தில் இருக்கும் சொற்களில் நிலவும் இசையும், நம்மை மகிழ்விக்கின்றன. நம்மை கண்ணீர் விடும் அளவுக்கு, கோபம் கொள்ளும் நிலைக்கு, கனவுகாணும் தன்மைக்கு, மகிழ்விக்கும் எல்லைக்கு புத்தகங்கள் இழுத்துச் செல்லுகின்றன. ஓர்புத்தகம், மனித சமுதாயத்தின் நிகழ்கால, வருங்கால சந்ததியார்கள் கழிபெருவகையுடைய சிருஷ்டிக்கப்பட்ட மகோன்னதமான, சிக்கலான பிரமிப்பை ஊட்டும் படியான அற்புதமேயாகும்.

நம்மிடையே இன்னும் ஓர் பொதுவான மொழி இல்லாதிருப்பதால், நமக்கு ஐக்கிய உலக இலக்கியம் ஏற்படாமல் இருக்கிறது. உரைநடையிலே அல்லது காவியத்திலே உள்ள எல்லா இலக்கியத்தின் சிருஷ்டியானது எல்லா மனிதர்களுக்கும்

பொதுவாயுள்ள உணர்ச்சிகள், எண்ணங்கள், கருத்துக்கள்—ஆகிய இவைகளின் ஐக்கியத்தில் பங்கெடுத்துக் கொள்ளுகிறது. சுபிட்சத்திற்கும், மகிழ்ச்சிக்கும் வாழ்க்கையில் தொல்லைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கும், வாழ்க்கைத்திறனை உயர்ந்த நிலையில் வைப்பதற்கும் ஆவன செய்யும் மனிதனின் முயற்சிகளைப் பற்றி இலக்கியம் கூறுகிறது. இவையெல்லாவற்றையும் விட எல்லோருக்கும் பொதுவானது, வார்த்தைகளாலும், எண்ணங்களாலும் அறியப்படாததும், அறிவிற்கெட்டாதபடி உள்ளதும், உலகிலே நிலவுவதும், நம் இதயங்களிலே ஒளியுடன் பிரகாசிப்பதுமான அழகைப்பற்றி இலக்கியம் அழகுபடச் சொல்கிறது. இந்த அழியாத அழகினால்தான் நாம் உயர்ந்த எண்ணங்களையும், உறுதியான இயந்திரங்களையும், வானளாவிய மாதா கோயில்களையும், மலையினூடே செல்லும் குகைப்பாதைகளையும், எழுதப்பட்ட புத்தகங்களையும், செய்யுள்களையும், வர்ணம் தீட்டிய ஓவியங்களையும், அநேக ஆயிரக்கணக்கான டன் நிறையுள்ள கலைகளையும் உற்பத்திசெய்ய முடிந்தது.

இலக்கியத்தின் ஓர் சிறந்த மேன்மையான அம்சம் என்னவெனில், அது நம் மனசாட்சியை உறுதிப்படுத்துவதல்லாமல், நம் வாழ்க்கையில் தோன்றும் எண்ணங்களை சிறியதாகச் செய்யாமல் விரிவடையச் செய்து, உணர்ச்சிகளை நல்லபாதையில் திருப்பிவிடுகிறது.

இலக்கியமானது நமக்கு, சைனாவில் பெண்வெறி பிடித்த காமப் பேயனான ஹென்-டாய் (HEN-TOI) போன்று, ஸ்பெயினிலும் டான் ஜூவான் (DON JUAN) என்பவன் ஒருவன் இருந்தான் என்பதைக் கூறுகிறது. எதியோபியர்களும், பிரென்சுக்காரர்களும், காதலில் ஏற்படுகின்ற இன்பதுன்பத்தைப் பற்றி ஒரே மாதிரியான பண்பாடுகின்றனர். மனிதன் தன் இதயத்தில் பாதியை ஓர் பெண்ணிடத்தில் காண விரும்புவதை எல்லாக்காலங்களிலும், எல்லா நாட்டுமக்களிடமும் நாம் பார்க்கமுடியும் என்ற உண்மையை இலக்கியத்திலிருந்து அறியலாம். ஆசியாவிலுள்ள ஓர் கொலையாளி எவ்வாறு ஜன சமுதாயத்தால் வெறுக்கப் படுகிறானோ, அவ்வாறே ஐரோப்பாவில் உள்ள கொலைஞன், மக்களால் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்படுகிறான். ஆங்கில இலக்கியத்திலே வரும் கோமாளிவீரனை டான்குக்ஸாட் (DON GUIKOTE) நாம் எங்கே இருந்த போதிலும் நம்மை ப்ரவசப்படுத்துகிறான். எல்லாமனிதர்களும், எல்லாக்காலங்களிலும், எல்லா மொழிகளிலும் ஒரே விஷயத்தைப் பற்றித்தான் பேசுகின்றனர். மிருக உணர்ச்சிகளுக்கு அடிமையான மனிதர்களும், மேலான அறிவுடையோர்களும் எல்லா நாடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இம்மாதிரி அநேக உயர்ந்த குணங்களும், வெறுக்கத்தக்க தீய குணங்களும், உலகில் நிலவியுள்ளன என்பதை வெள்ளிடை மலைபோல் இலக்கியம் எடுத்துக் காட்டுகிறது. இது ஒரு நிலைக்கண்ணாடி. எப்படி நம் உருவத்தை நாம் நிலைக் கண்ணாடியில் பார்த்து அறிந்து

கொள்ள இயலுகிறதோ, அதுபோல் உலகிலுள்ள ஆசாபாசங்கள் மனக்கடுகடுப்பு, அதிருப்தி, மகிழ்ச்சி, துன்பம், முட்டாள்தனம், கீழான உணர்ச்சிகள். துன்பம் ஏற்பட்ட பொழுது, மின்னல் போன்று தோன்றும் வீரம் அல்லது பேடித்தனம், அன்பின் மூலமாகப் பிறக்கும் தைரியம், வெறுப்பின் சக்தி, பாசாங்கு, பொய்கள், மோசம், எண்ணங்களில் தோன்றும் வக்கிரம், முடிவில்லா வருத்தம், தைரியமில்லா நம்பிக்கைகள், புனிதமான கனவுகள்—இவைகள் இலக்கியத்தில் நிரந்தரமான இடம் பெறுகின்றன. மேற்சொன்ன எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் சுற்றித்தான் இந்த உலகம் இயங்குகிறது. எல்லோருடைய மனச் சமுத்திரத்தில் சலிப்பின்றி 'சளேர், சளேர்' என்று அடித்துக் கொண்டிருக்கும் அலைகளும இவைகள்தாம். துடிதுடிப்பான உணர்ச்சியுள்ள ஓர் நண்பனின் கண்களைக் கொண்டோ, அல்லது கண்டிப்பான—நேர்மையான நீதிபதியின் கண்களைகொண்டோ, நாம் மனித சமுதாயத்தை நோக்கும் பொழுது, நமக்கு இரக்கமும், சலிப்பும், ஆனந்தமும் கண்டனமும் செய்யும் நிலையும் ஒருங்கே ஏற்படுகின்றன. ஆனால், இலக்கியம், மனிதனை இவைகளிலிருந்து விடுபடச் செய்து, வாழ்க்கைக்கும் விஞ்ஞானத்திற்கும் அப்பால் உள்ள உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கிறது. இலட்சியங்களை அடைய முன்னேறுவதும் வாழ்க்கையை நன்கு அமைக்க விரும்ப முயற்சிசெய்வதுமான மனித சமுதாயத்திற்கு இலக்கியம் வழிகாட்டியாக இருக்கும் ஒளியாக இருந்து பிரகாசிக்கிறது.

மனிதனின் குறைபாடுகள் மட்டும் இலக்கியத்தை உண்டாக்காது. இம்மாதிரியான இலக்கியத்தில் சொற்கள் உயிரில்லாமல் நடமாடும். உருவங்கள் நடைப்பிணங்களைப் போன்றிருக்கும். இத்தகைய இலக்கியம் உடைந்த கண்ணாடிக்கு ஒப்பாகும். உடைந்த கண்ணாடியில் நம் பிரதிபிம்பத்தைச் சரிவரப் பார்க்க இயலாது. நல்ல இலக்கியம் மனிதனை குருட்டு நம்பிக்கையிலிருந்தும், கடவுள் கொள்கையிலிருந்தும், அடிமைத்தனையிலிருந்தும் விடுவித்து, தாராளமான மனப்பான்மையுள்ளவனாகச் செய்து, தன் வாழ்வைத் தானே சுயமாக நிர்ணயித்துக் கொள்பவனாகச் செய்யவேண்டும். இலக்கியம் மனிதனுடைய குறைபாடுகளை எடுத்துக் கூறுவதல்ல; மனிதனுடைய உன்னதமான குணங்களைக் கூறுவதாகும். இலக்கியத்தின் கண்களுக்கு, நாடுகளுக்கிடையிலும், வர்க்கத்தினர்களுக்கிடையிலும், மக்களுக்கிடையிலும் நிலவுகின்ற பகைமையையும் குரோதத்தையும் வளர்க்கின்ற வாழ்க்கையின் கொடிய மாறுபாடுகள், அனாதி காலத்திலிருந்து, அதாவது பல நூற்றாண்டுகளாக இருக்கும் குறைகளாகத்தான் தென்படுகிறது. இலக்கியமானது, மனிதனின் உயர்ந்தஎண்ணம் எல்லாக் குறைகளையும் நீக்குமென்றும், மனத்தை விரிவுபடுத்தமுடியுமென்றும், கேவலமான மிருக இச்சைகளுக்கு மனிதன் அடிமையாகாமல் காப்பாற்றச் செய்யமுடியுமென்றும் நம்புகிறது. ஜீவன் நிறைந்த சக்தியின் பிரவாகம், உருவங்களிலும் சொற்களிலும் பாய்ந்தோடுவதை நோக்கும்

பொழுது, பல இனத்தவர்களுக்கிடையேயும், பல சமுதாயங்களுக்கிடையேயும், பல வர்க்கத்தார்களுக்கிடையேயும் உள்ள வேற்றுமைகளைக் களையவும், மக்கள் ஒருவருக்கொருவர் போர்புரிவதைத் தடுக்கவும், அவர்களுடைய எல்லா முயற்சிகளையும், இயற்கையின் விசித்திர சக்திகளுடன் போர்புரியத் திருப்பி விடுவதிலும், இந்த ஜீவ ஓட்டத்தின் பிரவாகம் உள்ளது என்பதை நாம் உணர்கின்றோம்.

இலக்கியமானது, அருஞ்செயல்களையும், குறைபாடுகளையும், மறதிகளையும், நம் முன்னோர்களின் வெற்றிகளையும், கூறும் அழியாத சரித்திரமாகும். நம் எண்ணங்களை மாற்றும் செல்வாக்கு பெற்றிருப்பதாலும், மிருக இச்சைகளுக்கு அடிமையாகாமல் நம்மைக் காக்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதாலும், நம் உணர்ச்சிகளைப் பண்படுத்தும் தகைமையுடையதாக இருப்பதாலும், மக்களின் குறுகிய மனப்பான்மையால் ஏற்படும் சில்லறைத்தகராறுகளைப் போக்கி, நாம் எல்லோரும் அழகுமிக்க, சுதந்திரமான—மகிழ்ச்சியான வாழ்விற்குத்தான் பாடுபடுகிறோம் என்ற உண்மையை மக்களுக்கு உணர்த்தி, பிரிந்து கிடக்கும் நாடுகளையும், சமுதாயங்களையும், இனங்களையும் இலக்கியம் ஒன்றுபடுத்தும்.

முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை.

—நெப்போலியன்.

புதுமுறை
திரைப்பட நாவல்.

●

130 பக்கங்கள்
படங்கள் நிறைந்த அழகிய பதிப்பு.

★

விலை 1-0-0

●

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சகொண்டபுரம், :: சேலம் மாவட்டம்.

எரிக புரட்சித் தீ!

பாவலர், தொ. ப. வேலாயுதசாமி.

(வெண்பா)

தலைவர், பெரியார்.

1. தன்மானத் தந்தை தமிழப் பெருந்தலைவர்
பொன்மாறும் இன்சொற் பொழிவாளர்—நன்மாண்பு
மக்கட் குணர்த்தி மனவிருளை நீக்கியவர்
தக்க பெரியாரே தான்.

தளபதி, அண்ணா.

2. தண்ணார் செழுந்தமிழ் நாட்டுத் தளபதி
அண்ணாத் துரையின அறிவுநிறை—கண்ணாம்
வளந்தரு செஞ்சொல் மழையாற் செழித்து
விளைந்தது ஞான விளைவு.

புரட்சிக்கவி பாரதிதாசன்.

3. செவியின் மடுத்திடில் தேனைத் தினிக்கும்
கவியிற் புரட்சியைக் காட்டிப்—புவியில்
பழியாப் புகழும் பணமுடிப்பும் பெற்றோன்
எழிலார் புதுவையானே.

நெடுஞ்செழியன்.

4. களந்தரவும் வாட்புயக் காளைபோல் வீர
உளந்தாங்கி நேர்மை யுரைக்கும்—இளந்தாடி
தோன்றும் நெடுஞ்செழியன் சொற்கள் உணர்ச்சிவித்
தூன்றும் இளைஞ ருளத்து.

அன்பழகன்.

5. ஆக்கம் தமிழருக் காக்கப் பொதுநன்மைக்
கூக்கம் குறையா துழைத்திடும்—நோக்கம்
பெரிதுடைய அன்பழகன் பேச்சுத் திறமை
அருமையினு மேலருமை யாம்.

குறிக்கோள்

6. எரிக புரட்சித்தீ எங்கினும் பற்றி
கரிக அறியாமைக் காளான் — விரிக
புதியக் கருத்துக்கள் பொன்னொழுக் கங்கள்
பதிக தமிழரின் பால்.

7. காலம் புரட்சி கலைபுரட்சி கண்கவருங்
கோலம் புரட்சி குணம்புரட்சி — சால
உடையும் புரட்சி உணவும் புரட்சி
நடையும் புரட்சி நடப்பு.

8. புரட்சி எனுஞ்சொல் புகலும் பொழுதே
மிரட்சி யடைந்திட வேண்டாம் — திரட்சி
பொருந்தும் தமிழ்நாடு பொன்னெனமுன் னேறத்
திருந்தும் படியாக்குஞ் சீர்.

9. பகுத்தறிவுக் கண்கொண்டு பார்ப்போமே யானால்
வகுத்தபல முன்னாள் வழக்கம் — புகுத்துமொரு
சட்டமு மின்றித் தனியாகத் தான்மாறி
விட்டதைக் காண்போம் வியந்து.

10. ஒன்றினை யொன்றோ டுறக்கட்டி யொட்டுமாங்
கன்றினை யுண்டாக்கிக் காப்பாற்றித் — துன்றிய
தீங்கனியை யாவருடன் தின்று சுவைக்கின்றோம்
ஈங்கிதுவும் ஓர்புரட்சி யே.

11. கஞ்சி குடித்திட்டோம் காப்பீ குடிக்கின்றோம்
அஞ்சி மருண்டோமா அன்பரே! — விஞ்சும்
அறிவைச் செலுத்தியே ஆராய்ந்து பார்த்து
நெறியை யுணருவீர் நேர்.

12. கட்டுங் குடுமியைக் கத்தரித்துப் பற்பலவாய்
வெட்டுஞ் சிகையால் விளங்குகிறீர் — திட்டம்
இதுதான் எனவுண்டோ எப்பொழுதும் வாழ்க்கை
யதிலே எழில்வேண்டி னால்.

13. எழுத்தாணி கொண்டுபனை யேட்டி லெழுதிக்
கழித்தார்கள் நம்முன்னோர் காலம் — உழைப்பாரும்
ஆயுமறி வாலின் றழகாகக் காகிதத்தில்
தோயவரை கின்றோம்கோல் தொட்டு.

14. அரைமணி நேரத்திற் காயிரம் பக்கம்
சரசர வென்றடித்துத் தள்ளும் — திரமிகும்

அச்சுப் பொறியினை யாக்கி யமைத்ததுவும்
மெச்சும் புரட்சியே மேல்

15. மின்னால் விளக்கு விளங்கும் படக்காட்சி
மன்னும் இசைத்தட்டு வானொலி — முன்னம்
இருந்ததோ கூறுங்கள்? எல்லாம் புரட்சி
புரிந்ததே நன்மை பொது.

16. தண்ணீரில் மூழ்கித் தனியோடுங் கப்பலும்
விண்ணூடு செல்லும் விமானமும் — கண்ணாரப்
பார்க்கின்றோம் எல்லாம் பயன்சேர் புரட்சியின்
மார்க்கந்தான் காண்பீர் வழி

17. பச்சையாய் ஆகாரம் பண்டு புசித்தார்கள்
இச்சையாய் வேகவைத் திந்நாளில் — மெச்சியே
ஆறு சுவையோ டருந்துகிறோம் முன்னோர்க்கு
மாறு படவே மதித்து.

18. மலையு மரக்கிளையும் வாழு மிடமாய்க்கொண்
டிலையும் தழையும் இடையில் — கலைபாய்
உடுத்திமுன் னூற்றதுமின் றுள்ள நிலையும்
அடுத்துளம் வைத்துணர்வீ ரால்.

19. வில்லாலும் வேலாலும் வேந்தர்முன் போரிட்டார்கள்
கல்லாலும் ஆயுதங்கள் கண்டார்கள் — வல்லாளர்
ஆய்ந்த புரட்சி யறிவா லணுக்குண்டு
வாய்ந்த திதுநாள் வரை.

20. இயற்கைப் பொருளை யியல விணைத்து
முயற்சிப் பணியால் முடித்துச் செயற்கைப்
பொருளாக்கி வாழ்வில் புதிய நிலையைத்
தருமாட்சி சீர்புரட்சி தான்.

21. மக்களுக்கு நன்மை வழங்கித் துயரொழிக்கத்
தக்கவழி செய்யத் தயங்காதீர் — எக்கடவுள்
கோபித்துக் கொண்டாலும் குற்றமில்லை நந்தமிழர்
ஆபத்துக் காளா வதா?

22. மனிதன் மனிதனென வாழ வுணர்த்தும்
புனித வழியதனைப் போற்றி — இனிய
அறிவை மயக்கி அடிமைப் படுத்தும்
நெறியை விலக்குவதே நேர்.

23. பாசம் பிடித்த பழைய வழக்கத்தை
நாசப் படுத்தி நடுநின்று—பேசும்
பெரியார் வகுத்தவழி பின்பற்றித் தொண்டு
புரிவோம் நலமாம் பொருட்டு

24. அறிவுக் குதவாத ஆபாசமான
வெறியர் பழக்கத்தை விட்டு—நெறியைத்
திருத்தி ஒழுங்காகச் செல்வத் துறையில்
விருத்தி யடைவோம் விரைந்து.

25 பெண்ணுரிமை, பேசுதற்குப் பேச்சுரிமை, நோக்குதற்குக்
கண்ணுரிமை, செய்வதற்குக் கையுரிமை—மண்ணுரிமை
ஏற்பட வேண்டும் இல்லையேல் அழிவினத்தின்
பாற்பட நேரிடும் பண்பு.

26. மடமைத் தனையூட்டி வல்லமையை வீழ்த்தி
அடிமைப் படுகுழியில் ஆழ்த்திக்—கொடுமை
புரிந்திட்டார் ஆரியப் பொல்லாப் பொடியர்
தெரிந்திட்டார் சூழ்ச்சிச் செயல்.

27. சாதி யழிப்போம் சமயம் தகர்த்தெறிவோம்
பேதம் ஒழிப்போம் பிளவின்றி—நீதி
வழங்குவோம் இந்நாட்டு மன்னர்களா மென்றே
முழங்குவோம் உண்மை மொழிந்து.

28. எவர்க்கும் பணியோம் இனமுணர்வோம் எந்நாட்
டவர்க்கு மிளைத்திடோம் அஞ்சோம்—உவர்க்கும்
விரிகடலில் செல்வோம் விண்ணில் பறப்போம்
உரிமையுடன் காமராசாள் வோம்.

29. நெல்லை விளைவிப்போம் நீள்வயலில் வாழையொடு
நல்ல கனிமரங்கள் நாம்வளர்ப்போம்—முல்லை
புதிய மணங்கமழ் பூங்கா வமைப்போம்
மதியின் வழியடைவோம் வாழ்வு.

30. கட்டிடம் செங்கல் கருங்கல்லால் கட்டியே
பட்டினம் ஆக்குவோம் பாலங்கள்—கட்டுவோம்
சிற்பம் செதுக்குவோம் தீட்டுவோம் ஓவியம்
பொற்பு விளங்கப் பொலிந்து.

(தொடரும்)

+ ஆதிரை. +

~ ப. கண்ணன் ~

பாத்திரங்கள் :— ஆதிரை—சாதுவன் மனைவி
சாதுவன்—வணிகன்
தத்தன்—சாதுவனின் நண்பன்.
பூங்குழல்—கணிகை
குருமகன்—நாகர் தலைவன்
மற்றும் நாகர்கள், ஒரு முதியவர்.

★

காட்சி 1.

(காவிரிப்பூம்பட்டினத்து வணிகன் சாதுவன் வீடு. ஆதிரை படித்துக் கொண்டிருக்க, சாதுவன் வருகிறன்)

சாது :- ஆதிரை!

ஆதி :- ....

சாது :- ஆதிரை! கூப்பிடுவது காதில் விழவில்லையா? சுவடிக்குள் புதைந்து போய்விட்டாயா என்ன?

ஆதி :- (திடுக்கிட்டு) அத்தான்!... மன்னிக்க வேண்டும். செந்தமிழ்ச் சுவையிலே சொக்கிவிட்டேன். புலவர்களின் கற்பனையும், மொழி நயமும் இனிக்கும் தேனூற்று அத்தான்.

சாது :- தேனூற்று! உனக்குத் தேனூற்று—எனக்கு எட்டிக்காய்!

ஆதி :- இல்லையத்தான்! நம் தாய் மொழி கட்டிக்கரும்பு அத்தான்.

சாது :- பயனற்ற வெறும் பிரமை. பசிக்குச் சோறு போடுமா தாய்மொழி? வீடுதருமா?

ஆதி :- எல்லாம் கொடுக்கும், தாய்மொழியின் சக்தி மிகப்பெரிது. காட்டுமிராண்டிகளையும் கனிய வைப்பது. கலாசாரத்தை, நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பது தாய் மொழியே!

சாது :- (சிரித்து) எனக்கு நம்பிக் கையில்லை. வாழ்க்கையை இன்ப மாக நுகர வேண்டும். அது ஒன்று தான் எனக்குத் தெரியும்; தேவையும் அதுதான்.

ஆதி :- இன்பம். இந்த வார்த்தை கூட நம் தாய்மொழிதானே!

(வெளியிலிருந்து குரல்)

தத்தன் :- சாதுவா! சாதுவா!

சாது :- தத்தா! இதோ வந்து விட்டேன்.

ஆதி :- இன்னும் நீங்கள் சாப்பிட வில்லையே. அதற்குள் எங்கே புறப்படுகிறீர்கள்? அப்படி என்ன அவசர வேலை?

சாது :- சே! அபசகுனம், ஏன், எங்கே, எதற்கு? இம்மாதிரி இனிமேல் என்னைக் கேட்கக் கூடாது. கேட்டால் நான் சொல்லப் போவதுமில்லை.

நந்த :- (உள்ளேவந்து) என்னப்பா! தாமதம் நெருக்கடி பலமா இருக்கு. வா முடிஞ்சா வா. இல்லென்னா நான் போறேன்.

சாது :- நந்தா! நில். இதோ வந்துவிட்டேன்.

ஆதி :- (வருந்தி) ஏன், எங்கே எதற்கென்று நான்கூடவா கேட்கக் கூடாது? அத்தான்! என்ன தவறு செய்தேன்? ஏனிந்தக் கோபம்? சொல்லுங்கள், தங்கள் நலம் என் நலமல்லவா?

சாது :- அதனால்தான் என்னைத் தடுக்கக்கூடாதென்கிறேன். வடிக்காதே கண்ணீரை. நந்தா! புறப்படு போகலாம். இந்தப் பெண்களே இப்படித்தான்.

(போகிறான்)

காட்சி 2.

(கணிகை பூங்குழலி வீடு.)

நந்தன் :- (வெளியிலிருந்தபடியே) பூங்குழலி! பூங்குழலி! உனக்கே என்ன வேலை? இப்படி வாயேன்.

பூங் :- (உள்ளிருந்தபடியே) ஏன்? என்ன அவசரம் அள்ளிக்கொண்டு போகிறது? கூடத்தில் உட்கார்; வந்துவிட்டேன்.

நந்த :- அடியம்மா! கொஞ்சம் வெளியே வந்துதான் பாரேன், வந்திருப்பது யாருன்னுதான்.

பூங் :- (வந்துபார்த்து) அடடா! நீங்களா? வாருங்கள், வருங்கள். அபசாரம் செய்துவிட்டேன். உட்காருங்கள் சோபாவில். இன்று வருவீர்களோ என்று நினைத்தேன், வந்தேவிட்டீர்கள்.

சாது :- அன்புதான் காரணம்.

நந்த :- சாதுவைத்தானே நெனைச்சே? ஆமாமா, இனிப்பைக் கண்டாத்தானே ஈயும் எறும்பும் மொய்க்குது.

பூங் :- நீ அப்படியொன்றும் கசப்பு இல்லையே! உனது அருமையான நண்பரை எனக்கு அறிமுகப் படுத்தினையே, மறக்க முடியுமா?

நந்த :- அது கெடக்குது. இப்ப நான் ஒண்ணு நெனைக்கிறேன்.

பூங் :- என்ன?

நந்த :- பொன்னான நேரத்தைப் புனிதமாக்கும் பகடை!

பூங் :- பகடையா? ரொக்கப் புள்ளிபோல் சொல்லிவிட்டாய். கடன் கொடுக்க ஆள் வேண்டுமே.

நந்த :- வணிகப்பிரபுவே! மானம் போகுதே! என்ன சொல்றீங்க?

சாது :- என்னடா வேணும்?

நந்த :- இருபது பொன். நாலே ஆட்டந்தான்.

சாது :- ஒரு ஆட்டமும் வேண்டாம். இருபத்தைந்து பொன் தருகிறேன். இப்பொழுது நீ போய் விட வேண்டும்.

நந்த :- நீக்கமட்டும் ஆடணுமாக்களா? அப்படின்னா சரி. முப்பது பொன் எடு.

பூங் :- பால் ருசியென்றால் பாலையோடு உருட்டுவதா?

சாது :- நந்தா! (பொன் கொடுத்து) இந்தா, நீ புறப்படு.

நந்த :- ஓ! நான் வர்றேன். (போகிறான்)

பூங் :- நந்தன் ஒரு அட்டை. தாராளமாக விட்டால், இரத்தத்தையே உறிஞ்சிவிடுவான்.

சாது :- தொலையட்டும், என் நண்பன். உட்கார்; நாம் ஆடலாம் (சேலையைப் பிடிக்க) விடுங்கள், பால் கொண்டு வருகிறேன். ஆமாம்... வைர வளையல் எங்கே? மறந்து விட்டீர்களா?

சாது :- மறப்பேனா பூங்குழலி! மெருகு போட்டாகிறது.

பூங் :- நான் வைரமாக அணிகிறேன் என்றால், உங்களுக்குத்தானே பெருமை!

சாது :- உனக்கு, என் சொத்து முழுதும் வைரமாக்கிப் பூட்டினாலும் போதாதே பூங்குழலி.

பூங் :- உங்கள் அன்புதான் எனக்கு ஆனந்தம். ஆமாம், வைர வளையல் போட்டபிறகு, இந்தப் பொன் ஒட்டியாணம் இடுப்புக்கு எடுப்பாக இருக்குமா?

சாது :- வைரத்தாலேயே ஒன்று செய்துவிடுகிறேன், ஆஹா! பசித்தவன் முன்னால் சர்க்கரைப் பொங்கல். என்ன ருசி, என்ன இன்பம்!

பூங் :- (வேடிக்கையாக) ஐயயோ! டுஸ்வா, திகனியே ஜாக்குச் சவா! திகனியே ஜாக்குச் சவா...

சாது :- என்ன? என்ன? டுஸ்வா, திகனியே (சிரித்து) பூங்குழலி! என்ன மொழியிது? என்ன சொல்லுகிறாய் நீ?

பூங் :- கள்ளிலும் காமத்திலும் வெறிகொண்ட காட்டுமிராண்டிகள் நாகரின் மொழி. உங்கள் காதலின் வேகத்தைக் கண்டதும் அவர்கள் நினைவு வந்துவிட்டது எனக்கு.

சாது :- ஆமாம். இதற்கு என்ன அர்த்தம்?

பூங் :- "டுஸ்வா, திகனியே ஜாக்குச்சவா" என்றால், அன்பரே, என்னைக் காப்பாற்றுங்கள் என்று பொருள். (சிரிக்கிறாள்)

சாது :- (சிரித்து) வேடிக்கைதான். உனக்குத் தெரியாத மொழியே இல்லைபோலிருக்கிறதே! பூங்குழலி. இந்த நாகர் மொழியை நான் கற்கலாமோ?

பூங் :- அவர்களைப்போல் உங்களுக்கும் வெறி வந்துவிட்டால்?...

சாது :- மருந்துதான் அருகிலேயே இருக்கிறாயே!

காட்சி 3.

(ஆதிரை வருந்தல்)

நல்ல குடிப்பெருமை—தமிழ்த்தாய்
நல்கிய பேருண்மை
அல்லல்தரும் விலைமாதர்-அணைந்தும்
அழிந்து போவதுவே.

சாது :- (வந்து) ஆதிரை! இதுவென்ன [illegible] தும் அ[illegible] யார் [illegible] விட்ட[illegible]

182336

ஆதி:- யாரும் சாகவில்லை. குடும்ப நலந்தான் மறைந்துவிட்டது.

சாது:- ஒழிபட்டும், கவலையில்லை. இப்போது அவசரமாக எனக்கு நூறு பொன் வேண்டும்.

ஆதி:- பெட்டியில் இருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள்.

சாது:- பெட்டியில் ஏதுமில்லை யென்பது எனக்குத் தெரியும்.

ஆதி:- பிறகு, என்னைக் கேட்பானேன்?

சாது:- உன் கழுத்திலிருக்கும் பொன் வடத்தைக்கொடு.

ஆதி:- (அஞ்சி) ஆ! என் உடம்பில் ஒட்டியிருக்கும் கடைசி நகை. நமது வாழ்வின் பிணைப்புச் சின்னமாகிய மாங்கல்யக் கோர்வை. இதையா கேட்கிறீர்கள்?

சாது:- ஆம். கணவனின் இன்பமே மனைவிக்குப் பிரதானமென்பாயே, அது வெறும் பாசாங்கல்லவென்றால், உடனே கழற்றிக் கொடு நகையை!

ஆதி:- அத்தான்! சுயபுத்தியோடு தான் கேட்கிறீர்களா?

சாது:- ஆ! என்னைக் குடியனென்று சொல்லுகிறாய்? உன்னை என்னடி கேட்பது? (பிடித்துக் கழற்றுகிறன்)

ஆதி:- ஆ...வேண்டாம்! விட்டு விடுங்கள். ஐயோ! விட்டுவிடுங்கள்.

சாது:- (அழுது) பொன்வடம் கழன்றுவிட்டது. இந்தா! உன் மாங்கல்யம். இது யாருக்கு வேண்டும், எடுத்துக்கொள். (போகிறன்)

காட்சி 4.

(பூங்குழலி வீட்டில்)

தந்த:- ஒழிஞ்சுதடியம்மா ஒழிஞ்சுது. அவன் பெண்டாட்டியேலேயும் இனிமே ஒரு பழுப்பு கெடையாது. தாலிவடந்தான் கடைசி. இனிமேல் சாதுவன், கறவை வத்தின பசு. காரம் போன மிளகாய்.

பூங்:- உண்மையாகவா?

தந்த:- முத்துமாலை கேட்டாயல்லவா? வெறுங்கையோடு வருவான், பாரேன் வரிசையை.

பூங்:- அது இல்லாவிட்டால் அவருக்கு இங்கென்ன வேலை?

தந்த:- அது அவனுக்குத் தெரியாதே. உஸ்... அதோ வந்துட்டான்.

(சாதுவன் வருகிறன்)

சாது:- பூங்குழலி! ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? என்ன விசேஷம்?

பூங்:- முத்துமாலை எங்கே?

சாது:- முத்துமாலைதான் வேண்டுமா? நான் வேண்டாமா?

தந்த:- வேண்டாமென்பார்களா? முத்துமாலைக்காக நீ வேணும்.

சாது:- பூங்குழலி! இதென்ன புதுமை! தந்தன் சொல்லுவது......

பூங்:- மெத்த உண்மை. சொன்ன சொல்லைக் காப்பவர் மட்டுந்தான் என் வீட்டு வாசலை மிதிக்கவேண்டும்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

[அறிவுக்குணவான புதிய நகைச்சுவைத் துணுக்குகள் வரவேற்கப்படுகின்றன. சிறந்த துணுக்கு எழுதினவர்க்கு, 3 ரூபா பெறுமானமுள்ள தென்றல் புத்தகங்கள் பரிசளிக்கப்படும்.—ஆ-ர்]

வந்தவர்:- சற்றுமுன் காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்ததும், அநேக ஜால வித்தைகளைச் செய்து காட்டியதும் நீர்தானே?

ஜாலவித்தைக்காரன்:- ஆமாம், நானே தான்.

வந்தவர்:- வித்தைகள் முடிந்து நெடுநேரமாகி விட்டதே, இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?

ஜாலவித்தைக்காரன்:- என்னுடைய அங்கவஸ்திரத்தைக் காணேம், அதைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

★

* * *

சாப்பிடவந்தவர்:- சூடாக என்ன இருக்கிறது?

பரிமாறுபவர்:- லாகூர் லாடு, பூனா பூரி, அமிர்தசரஸ் அல்வா, ஜலந்தர் ஜாங்கிரி. இதில் என்ன வேண்டும்?

சாப்பிடவந்தவர்:- சேலம் ஜிலேபி, குடகு குலோப்ஜான், அதிராம்பட்டினம் அல்வா, போத்தனூர் போண்டா, வத்தலகுண்டு வடை இருக்கா?

—ப. வே. ரா. பழனிசாமி,
கிரநத்தம்.

* * *

வாலிபன்:- (நாடக முதலாளியிடம்) ஐயா, நாங்கள் இருவரும் உங்கள் நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடிக்க ஆசைப்படுகிறேம்.

முதலாளி:- (தலைமயிர் அழகாய் இருப்பதைக் கண்டு) சரி நாளைக்கு வாருங்கள், சேர்த்துக் கொள்கிறேன்.

மறுநாள் இருவரும் நாடகக் கம்பெனிக்கு வந்தனர்.

முதலாளி:- ஏம்பா மொட்டை யடித்துக் கொண்டீர்கள்? தலைமயிருக்காகத்தானே உங்களை சேர்த்துக்கொண்டேன். தேவையில்லை. போய்வாருங்கள்.

வாலிபன்:- நாங்கள் கம்பெனியில் சேர்ந்தால் சாமிக்கு முடி கொடுப்பதாகப் பிரார்த்தனை வைத்துக் கொண்டோமே! என்ன செய்யறதுங்க?

—இ. கிருஷ்டநாதன்
தாரமங்கலம்.

தந்தை:- மகனே! இப்போ எனக்கு அறுபதாவது வயசு நடக்குது, இதிலே எனக்கு ஒரு பெரிய கண்டம் இருக்குதுன்னு ஜோஸ்யர் சொல்றாரு.

மகன்:- அதென்ன கண்டமப்பா? ஆசியா கண்டமா? ஐரோப்பா கண்டமா?

—வெ. பழனிசாமி,
சலகண்டபுரம்.

* * *

வேலைக்காரன்:- எஜமான்! என்னை அடிக்கடி 'நான் சென்ஸ்'ன்னு சொல்றீங்களே, அப்படின்னா என்னுங்க அர்த்தம்?

எஜமான்:- ரொம்ப நல்லவன் என்று அர்த்தமடா!

வேலைக்காரன்:- அப்படீன்னா என்னை வேலைக்கு வச்சுகிட்ட நீங்க தானுங்க சரியான நான் சென்ஸ்!

—O. M. சுப்ரமணியன்,
குளித்தலை.

* * *

ஒருவர்:- ஏனப்பா, கலியாணத்தின் போது அய்யர் 'தீர்க்க சுமங்கலீபவ' என்கிறாரே, அப்படிச் சொல்வதனால் அவர்கள் சுமங்கலிகளாகவே இருந்து விடுகின்றார்களா?

மற்றவர்:- என்னமோ, இந்த ஊரில் அவர் வாழ்த்தி வாழும் சுமங்கலிகளைக் காட்டிலும், அமங்கலிகள் தான் அதிகமாக இருக்கிறார்கள்!

—S. M. இப்ராகிம்,
கோரிப்பாளையம்.

* * *

அர்ச்சகர்:- என்னங்க அபிஷேகமா? அர்ச்சனையா?

பக்தர்:- அர்ச்சனைங்க.

அர்ச்சகர்:- உங்க பெயர், நட்சத்திரம் என்ன?

பக்தர்:- என்னங்க; என்னைப் படைத்த கடவுளுக்கு என் பெயரும நட்சத்திரமும் தெரியாதுங்களா? அதுவும் நீங்க சொல்லித்தானு தெரியணுமா?

—எர். எம். பழனி,
கல்லிடைக்குறிச்சி.

* * *

கிருஸ்துவ பாதிரி:- (பள்ளியில்) பிள்ளைகளே! ஒவ்வொரு பொருளையும் உண்டாக்கிய ஒருவனைக் காண்கிறோம். உதாரணமாய் நாற்காலியை உண்டாக்கியவன் தச்சன். அதேபோல் இந்த உலகத்தையும் ஒருவன் உண்டாக்கியிருக்க வேண்டும். அவனைத்தான் நாம் கடவுள் என்கிறோம்.

ஓர் மாணவன்:- ஓர் சந்தேகம் பாதர், தச்சன்; மரம், உளி, கொட்டாப்புளி, இவைகளைக் கொண்டு நாற்காலியை உண்டாக்கினான். கடவுள் இவ்வுலகத்தை உண்டாக்க எந்தெந்த பொருளை உபயோகித்தார்? எந்த இடத்தில் இருந்து கொண்டு செய்தார்?

—நு. சிதாமணியன்,
கோலார் தங்கவயல்.

★ இத்திங்கள் பரிசுபெற்றவர்: ப. வே. ரா பழனிசாமி, கீரநத்தம், கோவைமாவட்டம். இவருக்கு தென்றல் புத்தகங்கள் அனுப்பப்பட்டன.

கோமளம்.

அமரன்.

பக்கத்து ஊரில் ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்துவிட்டு, வீட்டிற்குவர இரவு ஏழரை மணியாய் விட்டிருந்தது. என்னைக் கண்டதும், கம்பவுண்டர் கந்தசாமி ஓடிவந்து ஒரு கடிதத்தைநீட்டினன், என்னை உடனே வரச் சொன்னதாகவும் கூறினன்.

கடிதம் கோமளத்தால் எழுதப் பட்டிருந்ததைக் கண்டதும், உள்ளம் வேல்தாக்கியதைப்போல வேதனையடைந்தது. அவள் ஏன் என்னை இந்த இரவில் வரச் சொன்னுள் என்ற சிந்தனை, தேள்போலக் கொட்டியது.

கோமளம், நகரத்தின் கீழ்க்கோடியில், ஆண்களின் இச்சைக்கு இரையாகத் தங்கள் உடலை விற்கும் விலை மகளிர் வசிக்கும் இடத்தில் இருக்கிறாள். அவள் ஒருவாரத்திற்கு முன்புதான் அங்கு வந்தவள்; ஆள் வாட்டசாட்டமான, பிறரை எளிதில் கவரும் வனப்புமிக்கவள்; யாருக்கும் இடம் கொடுத்துப்பேச மறுக்கிறாள்; அதனால் ஆண்கள் உலகமே ஒன்றுகூடி அந்தப் பச்சைக்கிளியைப் பிடிக்க வலைவிரித்தும் பயன்படவில்லை.—இப்படியெல்லாம் அவளைப்பற்றிய செய்திகள் பரவி இருந்தன. என் பீதிக்குக் காரணம் இதுவேதான்!

நான் சிந்தனை நெருப்பில் காய்ந்த வண்ணம் கடிதத்தைப் பிரித்தேன். எழுத்துக்கள் ஒவ்வொன்றும் உயிர் பெற்று என்னுடன் பேசுவதுபோல அமைந்திருந்தன. நான் அழகு ஓவியத்தை ரசிப்பதைப்போல, கடிதத்தில் கருத்தைச் செலுத்தினேன். அது:

"அன்பு கெழுமிய டாக்டர் அவர்களுக்கு!

ஐயா!

கடிதம் கண்டவுடன் விரைந்து வரவும். காரணம் நேரில் அறியலாம். தாமதமாக இருந்துவிடக்கூடாது. நேரில் வந்து அழைக்காமல் கடிதம் மூலம் அழைப்பது அநாகரிகம் என்பதை உணர்கிறேன், இருந்தும் சூழ்நிலை தடுக்கிறது. மன்னிக்கவும்!

கோமளா."

கடிதத்தைப்படித்ததும், விளங்காத விடுகதைக்கு விளக்கம் தேடுவோன்போல, ஒருவிநாடி குழம்பினேன். பிறகு அவளை நேரில் போய் பார்த்து விடுவதென்ற முடிவுடன் உணவை முடித்துக் கொண்டு, கையில் மருந்துப் பெட்டியுடன் கோமளத்தின் வீடு நோக்கிப் புறப்பட்டேன்.

வீட்டை யடைந்தபோது, அவள் சாதாரணமாய் கட்டிலில் படுத்திருந்தாள். என்னைக் கண்டதும் படுக்கை

யிலிருந்து எழுந்து, அன்புடன் வரவேற்றாள். "டாக்டர்சார்! பாவம், உடல் துவண்டு, பேசச்சக்தியற்று, படுத்த படுக்கையாய்க் கிடப்பாள், சிகிச்சைசெய்து காக்கலாம் என்று ஓடிவந்த உமக்கு,என் சிரித்தமுகமும், செவ்வையான உடலும் திகைப்பை மூட்டிவிட்டிருக்குமெனகப்புகிறேன். அப்படித்தானே, டாக்டர்?" என்று புன்முறுவல் பூத்தாள் கோமளம்.

அவள் உடலை ஆடம்பர உடைகளோ, நகைகளோ சுமைதாங்கியாக்கிக் கொண்டிருக்கவில்லை. இருந்தும், அவள் நான் கேள்விப்பட்டிருந்ததைவிட பேரழகியாகத் திகழ்ந்தாள்.

"டாக்டர்சார்! இப்படி அமருங்கள்......பரத்தை வீடாயிற்றே என்ற பயமா டாக்டர்?......பயப்படாதீர்கள் உட்காருங்கள்."

அவள் அன்புதவழ வேண்டினாள், நான் அச்சம் நீங்கியவனாக அவள் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தேன். அவளும் ஒரு நாற்காலியை என் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"டாக்டர்சார், க்ஷயரோகம் ஒரு தொத்து நோய்தானே?"

கண்சிமிட்டாமல் என்னையே பார்த்தபடி கேட்டாள்.

"ஆம்;—உனக்கு ஏதாவது......"

"இல்லை; பயப்படாதீர்!—ஆமா, அது பற்றிய மனிதன், பிறர் கண்களுக்கு நோயற்றவன் போலவே காணப்படுவானாமே, அது உண்மையா டாக்டர்?"

"ஆரம்பத்தில் அப்படித்தான். நாளாக ஆகவோ—அப்பப்பா, அவன் படும் அவஸ்தையைக் கண்ணால் காணச் சகியாது. அவ்வளவு கொடுமையானது!"

"அதைவிட கொடியநோயை—அதாவது பிறர் பார்வைக்குப் புலப்படாத பெரும் நோயைப் பெற்றிருக்கிறேன் டாக்டர்!"

அவள் இப்படிச் சொல்லிவிட்டு மேல்முகட்டை நோக்கினாள். நான் மௌனமாக— ஆனால் ஆர்வமுடன் அவள் வார்த்தையைக் கேட்டேன். மீண்டும் அவள் பேசத் தொடங்கினாள்.

"......எனக்கு உடல் நோயல்ல டாக்டர், உள்ளநோய்!......நீர் வெறும் டாக்டர் மட்டுமல்ல, எழுத்தாளரும் கூட! எண்ணத் தொலையாத அக்ரமங்களை—அவைகளால் தாக்கப்பட்டு, நடைப்பிணமாக வாழும் மக்களின் துயரவாழ்வை—ஏட்டிலே தீட்டி, நாட்டு மக்களுக்குக் காட்டி 'தேய்ந்தபாதை இது. சீர் செய்தால்தான் செழுமைகிடைக்கும் என்று எச்சரிக்கை செய்யும் சிந்தனைக்குக் கருவூலம் தாங்கள், இது தெரிந்தபிறகுதான், உம்மை இந்த இரவில் வரவழைத்தேன், உள்ளத்தில் அழுங்கிக் கிடக்கும் புயலை வெளிப்படுத்தி சாந்தியைப்பெற!"

உள்ளம் நெகிழப் பேசினாள்.நான் தணலில் காட்டிய மெழுகானேன். இச்சமயம், வேலைக்காரி காபியும் சிற்றுண்டியும் கொண்டுவந்து இருவருக்கும் படைத்தாள். நான் சறுக்குப் பாறையில் நடப்பவன் போலத் தடுமாறினேன், ஏன் இந்த [illegible] பெரிய சீர்திருத்தம் பேசும் நான் இப்படி பேதம் பாராட்டுவது?—என்

நிலை எனக்கே புரியாத புதிராக இருந்தது. என் மயக்கத்தைக்கண்ட அவள் புன்னகையுடன், "விபசாரியின் வீட்டில் எப்படி விருந்துண்ணுவது என்ற அச்சமா டாக்டர்?—பரவாயில்லை. சும்மா சாப்பிடுங்கள்" என்று கூறினாள் நான் மறுக்க முடியாமல் சிற்றுண்டியை முடித்தேன்.

ஒரு விநாடி தேய்ந்தது. அவள் பேச ஆரம்பித்தாள்.

"டாக்டர் சார்! நீங்கள் அதிகம் படித்தவர். நானோ சாதாரணமானவள். அதிலும் விபசாரியென்று பிறரால் நிந்திக்கப்படுபவள். அதாவது நீங்கள் இமயத்தின் உச்சி-இல்லை, ஈகையில் சிறந்த வானம்!—நான் கங்கையின் அடிப்பாகம், என்முன் உட்கார்ந்து பேசுவதே உங்களுக்குப் பெரிய அவமானமாயிருக்கலாம்.—ஆனால் குஷ்டரோகியையும், க்ஷய ரோகியையும் தொட்டு பழக்கப்பட்டு போன உமக்கு, என்னைப்பார்ப்பதில்—என்னுடன் பேசுவதில் அருவருப்பு தோன்றாது; சமூகத்தைக் களங்கப்படுத்தும் கொடிய பழக்கங்களை வேருடன் களைந்து, புதிய சமூகத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டவர். அதனால் தைரியம்கூட வந்துவிட்டிருக்கும் என்ற துணிவால்தான், உம்மிடம் என் வாழ்க்கை நாவலை—இல்லை; மரண சாசனத்தைப் படித்துக்காட்ட விரும்பி அழைத்தேன். அஞ்சாமல் காதை அகல விரித்துக் கொண்டு கேளுங்கள். கேட்டபின் மறந்துவிடாமல் எழுத்துச்சித்திரம் தீட்டுங்கள்......" என்றாள்.

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. விழிகள் குளமாக விம்மினாள்.

நான் அவளுக்கு ஆறுதல் கூறுவதாக, "கோமளம்! இவ்வளவு சின்ன வயதில், உனக்கென்ன அவ்வளவு பெரிய துன்பம் வந்துவிட்டது?" என்றேன்.

அவ்வளவுதான்! அவளுக்கு அழுகையும், ஆத்திரமும் தன்னை மீறி வந்துவிட்டன. மனம் பொங்கிய வண்ணம் பேச ஆரம்பித்தாள்.

"காரணம், வெறிபிடித்த ஆண்கள் — அவர்கள்மட்டுமல்ல; இன்றைய சமூக சூழ்நிலையுங்கூட! கல்லைப் படைத்த கடவுள், கருத்தற்ற மனிதரையும், கல்லைச் சிருஷ்டிக்கும் ஞாபகத்தில் உற்பத்தி செய்துவிட்டான் போலும்! அந்த மூளை குழம்பிய கடவுளை நான் காணுவேனேயாகில், சவுக்கால் அவன் முதுகில் சூடெழுப்பி, கேள்விகள் கேட்பேன்: 'கொல்லும் மனிதனையும் கும்பிடுக் காத்தையும் ஏன் படைத்தாய்?'' என்று.

மானம்படவரின்—என்ற கவியின் மொழியைப் படித்திருக்கிறேன்; அர்த்தமும் தெரிந்துகொண்டிருக்கிறேன்; அதைப்போல் வாழ்விலும் நடக்க முயன்றிருக்கிறேன். ஆனால் அந்த முயற்சியைக் கொன்றுவிட்டான் ஒரு கொடும்பாவி!

ஒருகாலத்தில், நாங்கள் உயர்ந்து வாழ்ந்த நெசவுத் தொழிலாளர் தான். ஆனால், காலத்தின் மாறுதலால் தாழ்ந்தோம். அதன் காரணமாக, எங்கள் தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அடுத்த நகரிலிருந்த 'சரவணபவா' மில்லில் என் கணவர் கூலிக்கு அமர்ந்தார். நான் முதலாளி முருகானந்தர் வீட்

டில் அவர் மனைவிக்கு உதவியாக வேலைக்காரியானேன்.

முருகானந்தர் பழுத்த சிவபக்தர்; பாப எண்ணங்களைக் கனவில்கூட நினையாத பரம சாது; நகரசபையின் தலைவர்: நாணயம் மிகுந்தவர் என்றெல்லாம் போற்றப்படுபவர்.

வயது ஒன்றும் அதிகமாகாவிட்டாலும், வாலிப சேஷ்டையின் காரணமாக உற்ற வயதைவிட, சற்று அதிகமாகக் காணப்படுவார். அவர் பருந்துப் பார்வையும், நேர்மையற்ற உள்ளமும் வேலைக்கமர்ந்த சில தினங்களில் உணரலானேன். உணர்ந்ததும் நடுங்கினேன். வெளியே சொல்லி அலை போட முடியவில்லை. முயன்றிருந்தாலும் என்னைப் பைத்தியக்காரி என்று தான் மக்கள் கூறியிருப்பர்.

அன்று மாலை மணி நான்கிருக்கும். முருகானந்தரின் மனைவி எங்கோ சென்றுவிட்டிருந்தாள். நான் சமையல் அறையிலே அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்த போது, முருகானந்தர் உள்ளே நுழைந்தார். அவர் திடீர்ப்பிரவேசத்தைக் கண்டு பயந்த நான், வெளியேறிவிட முயன்றேன், அச்சத்தால் என் குரல் கம்மியது. உடல் நடுங்கியது. அடுத்த விநாடி அந்தக் காமுகன் என் கரத்தைப் பற்றி, மயக்க மருந்து பூசிய கைக்குட்டையை என்னை முகரும்படிச் செய்தான். என்னை இழந்தேன் நான்.

அந்தோ! நான் சுய உணர்வை அடைந்தபோது என் கற்பு பயங்கரமாகச் சூறையாடப்பட்டிருந்தது. என்ன செய்வேன்? பதைத்தேன்; பதறினேன்; கண்ணீர் சிந்தினேன். வேறென்ன செய்யமுடியும்? வெளியில் சொல்லக்கூடிய விஷயமா இது? எனவே ஊமையாய் இருந்துவிட்டேன்.

உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமா? எப்படியோ செய்தி பரவிற்று. காற்றுவாக்கில் என் கணவர் காதிலும் விழுந்துவிட்டது; வந்தது ஆபத்து! அடுத்த நாள் அவரை உயிருடன் என்னால் பார்க்கமுடியவில்லை; தற்கொலை செய்துகொண்டு இறந்தார். இன்னல் படுகுழி வெட்டிய அந்த ஈனனை போலீசுக்குக் காட்டிக் கொடுக்கவோ, வஞ்சம் தீர்க்கவோ என்னால் முடியவில்லை. நெஞ்சமோ பற்றி எரிகிறது; நிலைகொள்ளவில்லை. எனவே அங்கிருக்கப் பிடிக்காமல், ஊரூராகச் சுற்றி அலைகிறேன். மற்றவர் நினைப்பதுபோல் நான் வேசியுமல்ல; விலை மாதுமல்ல!" என்று கூறிவிட்டு பெருமூச்செறிந்தாள் கோமளம்,

நான் அனுதாபத்துடன் "உன் சொந்த ஊர் எது?" என்றேன்.

"இப்போது, அதைத் தெரிவிக்க முடியாமைக்கு மன்னிக்கவும்"

"அப்படியென்றால் சரவணபவா மில்லும், முருகானந்தரும்......?"

"......அவைகள் என் கற்பனைப் பெயர்கள். கூடியவிரைவில் உண்மைப் பெயர் தெரியவரும். எனக்காக அனுதாபப்பட ஒருவராவது வேண்டாமா? நல்லது. நேரமாகிவிட்டது. நீங்கள் சென்று வாருங்கள்" என்று எதிர்பாராவிதமாக முடிவுரை கூறினாள்.

நான் மலைத்துப் போய்விட்டேன். அதற்குமேல், அவளை ஒன்றும் கேளாமல் என் இல்லம் நோக்கிப் புறப்பட்டேன். எண்ணச் சுழலில் மிதந்தவளாய் நடந்தேன்!

* * *

"பிரபல தேச பக்தரும், கன்னியூர் நகரசபைத் தலைவரும், காந்தா மில்லின் சொந்தக்காரருமான ஸ்ரீ வைகுண்ட நாத சர்மா கொலையுண்டார்" இந்தச் செய்தி என் காதைத் துளைத்தது. உடனே செய்தித்தாளை வாங்கி ஆவலுடன் புரட்டினேன்.

"நேற்று மாலை, கோமளம் என்ற மாது, கன்னியூர் ஸ்ரீ வைகுண்டநாத சர்மாவைக் காணச் சென்றாளாம். சென்றவள், அவர் அயர்ந்திருந்த வேளையில் அவர் மேல் பாய்ந்து, கூரிய கத்தியால் அவர் மார்பில் பலமான காயத்தை உண்டுபண்ணிவிட்டாளாம். செய்தி அறிந்த பணியாட்கள், போலீசாரை அழைத்துக் கொண்டு அவளைப் பிடிக்கச் சென்றபோது, அவள் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, துடித்து மடியும் ஸ்ரீமான் சர்மாவின் உடலைக் கண்டு நகைத்துக் கொண்டிருந்தாளாம். உடனே அவளை போலீசார் கைது செய்து சிறைச்சாலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றனர். —ந. தி.

பின் குறிப்பு :- கோமளம் என்பவள், ஏற்கனவே ஸ்ரீமான் சர்மா வீட்டில் எடுபிடி வேலை செய்து கொண்டிருந்ததாகவும், ஏதோ ஒரு காரணத்தால் சில மாதங்களுக்கு முன் சர்மா வீட்டிலிருந்து, வேலையினின்று நீக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இப்போது சிறையில் அவள் பைத்தியம் பிடித்தவளைப்போல சிரிப்பதும், சிந்திப்பதும், ஓடுவதும் ஆடுவதுமாக இருக்கிறாள்.

செய்தியைப் படித்ததும் என் சிந்தனை சிதறியது. கோமளத்தின் சிதைந்த வாழ்வு என் உள்ளத்தில் துயரப் பளுவை ஏற்படுத்தி வதைத்தது. எனினும், வீராங்கனை என்று முனகிற்று வாய்! ∅★∅

தோழியர். குஞ்சிதம்-வடிவேலுவின்

குழந்தைப் புத்தகங்கள்.

அன்புமணி	...	0—2—0
ஆலமரத்துப் பேய்	...	0—2—0
வழல்முளைத்த சாமியார்	...	0—2—0
பைங்கிளி	...	0—2—0
கெட்டிக்காரன்	...	0—2—6

0—10—0 முன்பணம் அனுப்புவோர்க்கு ஒரு "செட்" அனுப்பப்படும்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம், சேலம் Dt.

மனோதத்துவ விளக்கத்திற்கான சில வினாக்களும், விடைகளும்.

(ஆல்பர்ட் எட்வர்ட் விகாம்.)

(1) பொறாமை யாரிடம் அதிகம்? ஆணிடமா, பெண்ணிடமா?

விடை :- இவ்விஷயமாக ஒரு பரீட்சை நடத்தியதில், பொறாமைசாலிகள் பெண்கள்தான் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

(2) ஆண்களிடத்தில், பெண்கள் அதிகமாக விரும்பாத ஒரு குணம் எது?

விடை :- சுயநலம்.

3 :- எல்லோரையும் எழுதப் படிக்க வைக்க முடியுமா?

விடை :- கொஞ்சம் சிரமப்பட்டால், அறியாமையைப் போக்கி விடலாம்!

(4) புரட்சிகரமான எண்ணங்கள், ஒருவனுக்கு வாலிப காலத்தில் தோன்றி வயோதிக காலத்தில் மடிந்து விடுகின்றனவா?

விடை :- எண்ணங்களுக்குக் 'காலம்' வேண்டியதில்லை!

(5) இளம் வயதுடைய மக்களைப் பற்றி, பெற்றோர்கள் அறியவேண்டியது என்ன?

விடை :- அவர்களுடைய பகற்கனவுகள்!

(6) குழந்தைகளைப் பெறுவது—வீட்டைப் பார்த்துக் கொள்வது, இந்த வேலைகளினால் பெண்கள் அலுப்படைந்து, அவர்களுக்கு வாழ்க்கை சப்பிட்டுப் போவது உண்மைதானா?

விடை :- உண்மைதான். அதனால் சில விபரீத முடிவுகள் கூட ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பது ஆண்களின் பொறுப்பு.

(7) தங்களிடம் வசதி இருக்கிறது என்பதற்காக, சிலர் பெரிய காரியங்களைச் சாதிக்கிறார்களா?

விடை :- பெயருக்காக செய்பவர்களும் இருக்கிறார்கள். பரம்பரையாக வந்த குணத்தினால் அதன்படி நடப்பவர்களும் இருக்கிறார்கள்.

(8) புத்தகங்கள் படித்தால் அறிவு விசாலமடைகிறதா?

விடை :- ஆம். அறிவு தரக் கூடிய புத்தகங்களைப் படித்தால். அதுதான் இப்போது மிகவும் குறைந்து போய் விட்டதே!

•••• மலர் மணம். ••••

போற்றினேன்.

"சுடர்விழி நனிவாழும்" 'பகுத்தறிவும்" "படையல்" "பொங்கல் வாழ்த்து" கூறி, "நமது எதிர்கால"த்தின் எழில்பிம்பமாக வந்தபோழ்து, "மனைவியின் கடிதம்" கண்ட புது மணாளனைப் பூரித்துப்போனேன். "இன்பப்பொங்கல்" என்று "வெண்ணிலவின் ஒளியிலே" "எதிர்காலத் தமிழக"த்தைப்பற்றி "நல்லமுடிவு" எடுத்ததைப் போல, "பொங்கிய இன்பம்" தான் "திருடியல்ல, தியாகி" என நிரூபித்த அபலைப் பெண்ணின் உள்ள மகிழ்வை ஒத்ததாகும். "மனிதன் யார்?" என்று "உலகமும் உயிர்களும்" முடிவுகூறியபோது, அதனை அறியாதவர்களுக்குப் "பகுத்தறிவு கொடுக்கவேணும்" என, என்னை அறியாமல் பாடியும் விட்டேன். "பெண்ணுரிமை"யை இழந்த இந்நாட்டின் இரத்தினங்களை, "கசங்கிய மலர்"களாகத் திரையில் காண, "ஐயோ, சினிமாவே!" என்று புலம்புவதோடு, அவர்கள் வாழ்வில் மண்மூடிக்கிடக்கும் "கசந்த இரவு"களையும் எண்ணாமல் இருக்க முடியவில்லை. செஞ்சினத்தலைவன் "மா சே-துங்" போன்ற உழைப்பும், "ஜான் வில்லியம்ஸ்" போன்ற உறுதியும் கொண்ட தமிழகத்தின் 'வெள்ளி" "அண்ணா"வைக் கண்டு "களிப்பு" மட்டுமல்ல; "இராவணன் யார்?" என்பதையும் அறிந்தேன். முடிவில், திராவிடம் "வாழ" மலரும் "பகுத்தறிவே வாழ்க" எனப் போற்றினேன்! வாழ்க, அறிவுத் தொண்டு!

—மா. இளங்கோவன்,
பொரிக்கால்—கொச்சி.

புதுமை விருந்து.

பகுத்தறிவு பொங்கல் மலர் அறிவுக்கு விருந்தாகவும், அறியாமைக்குச் சவுக்காகவும், ஆண்ட இனத்தின் எழுச்சிக் கீதமாகவும் அமைந்துள்ளது. அதுவும் எட்டணா விலையில், பெறுதற்கரிய பேற்றைப் பெற்ற நாங்கள் மகிழ்கிறோம். பகுத்தறிவு மலர், பத்திரிகையுலகிலேயே பார்க்க முடியாத புதுமை விருந்து!

—"அமரன்"
பள்ளவள்ளி.

சிங்காரத் தொடுப்பு.

'பகுத்தறிவு மலர்மாலை' பொங்கலில் பூத்த பலவகைப் புட்பங்களின் சிங்காரத் தொடுப்பு! அதன் அழகை ரசிக்கும்போது, கண்ணன் அவர்களின் கருத்தோவியம் மறந்தால் கரும்பின் நுனிப்பாகத்தைக் கடிப்பதுபோலாகும்! வாழ்க அவர்! வளர்க பகுத்தறிவு!

—ஹுமாயூன்.
ஓமலூர்.

இனித்தது.

தேனின் சுவையும், இருள் போக்கும் ஒளியும், வன்மொழியின் உயிரோட்டமும் கலந்து

"பகுத்தறிவு பொங்கல் மல" ரின் ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு மலராக மணம் கொடுத்ததுடன், இனிக்கவும் இனித்தது!வளர்க பகுத்தறிவு.

—க. செங்கோடன்,
மேட்டூர் அணை.

மயக்கம்.

சென்ற ஆண்டு மலரினைவிட இவ்வாண்டு மலர் சிறந்த முறையிலே அமைந்துள்ளது. மலர் படித்து 'மயக்கம்' கொண்ட மாணவ நண்பரொருவர், மலர் வேண்டுமென விழைகின்ருர்.

"பணம் அனுப்பினுல் மலர் கிடைக்குமா?" என்று என்னைக் கேட்கிருர் — நான் உங்களைக் கேட்கிறேன். மலர் அவசியம் வேண்டும்.

—ஒவியன்,
விருதுநகர்.

தீந்தமிழ் மலர்.

தமிழ்ப் பேரறிஞர் பலர், நல்ல எளிய நடையில் எழுதிய கட்டுரைகள் மலரைச் சிறப்பிக்கின்றன. இவ்வாண்டு மலர், ஒரு தீந்தமிழ் மலர் என்றே கூறலாம். படித்துப் படித்து இன்புற்றுச் சேர்த்து வைக்க வேண்டிய களஞ்சியமாகும்.

'எதிர்காலத் தமிழகம்'— என்ற கட்டுரையின் இறுதி வேண்டுகோள் — அடுத்த கதையின் தலைப்பு (நல்ல முடிவு) தக்க முறையில் கொடுக்கப் பெற்றுளதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

—ஆ. பழ. குமரப்பன்,
வேகுப்பட்டி.

நற்றுணை.

புதுமைக் கருத்துக்களோடு, பொலிவுதரும் தண்ணிலவாய் உதித்த பகுத்தறிவுச் செல்வத்திற்கு, மூன்ருண்டுகள் நிரம்பி விட்டது என்பதை யெண்ணி வியப்புற்றேன்.

"அறிவு மணங்கமழும் பகுத்தறிவு, சிந்திக்கத்தெரியாதவர்களைச் சிந்தனையாளர்களாக்கி, அந்தச் சிந்தனையாளருக்கு நற்றுணையாக விளங்குகின்றது.

—சி. நரசிம்மன்,
சேலம்.

அறிவுப் புதையல்.

அறிஞர் அன்பழகனரின் ஆய்வுரைப்படி, நாடெங்கும் "அறிவு ஒளிபரவுகிறது; இருள் விலகுகிறது. புதிய எழுச்சி எங்கும் பரவ ஆரம்பித்து விட்டது" காரணம் பகுத்தறிவு தமிழ் நாட்டில் பவனிவருகிறது. சுருங்கச் சொன்னல் பகுத்தறிவு மலர் ஒரு அறிவுப் புதையல். தமிழகம் விழிப்படைந்து விட்டது என்பதை நிரூபிக்க மலர் நல்ல சான்று.

—வி. ராமமூர்த்தி,
கோவர்த்தனகிரி.

வரலாறு.

பேரறிஞர், எம். என். ராய்.

அந்தக் காலத்து வங்காளப் பயங்கரவாதிகளின் கூட்டத்துடன் சேர்ந்து, நாட்டுச் சேவையை இளம் வயதில் துவங்கிய அறிஞர், எம். என். ராய் அவர்களுடைய அரசியல் வாழ்வு, காலஞ்சென்ற தோழர்கள் லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் போன்ற புரட்சித் தலைவர்களுடன், உண்மைப் பேரறிஞர்களுடனும் மனப்பூர்வமாக ஒன்றுபட்டு, மார்க்சிய பாதைவழி இயங்கி, நியூ ஹ்யூமனிசம் என்ற புதுமைத் தத்துவத்தில் முடிவுற்றது.

1893-ல் வங்காளத்தில், கோவில் பட்டாச்சாரியின் புதல்வனாகப் பிறந்த ராய், 20 ஆண்டு முடிவதற்குள்ளாகவே பயங்கரவாதிகளுடன் 1903-ல் கலந்துகொண்டு 1906-ல் அரசியல் கொள்கையின் காரணமாகக் குற்றவாளியானார்.

1908-ம் ஆண்டில் வங்காள அவுரா சதிவழக்கிலும், 1914-ல் கார்டன் ரீச் கொள்ளை வழக்கிலும் ராய் சம்பந்தப் படுத்தப்பட்டார்.

1914–18-ல் உலகப் பெரும்போரும் மூண்டது. பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் பாதுகாப்புப் படையினரிடம் சிக்காமல், இந்தியாவை விட்டு வெளியேறி, சீனா சென்று, அங்கிருந்து அமெரிக்காவிற்கும் போய் மெக்ஸிகோ பிரதேசத்தில் நுழைந்து ஒரு கம்யூனிஸ்டு கட்சியை உருவாக்கினார் ராய்.

லெனினுடைய அழைப்பின் மீது ராய், இரகசியமாக வேறு ஒருவர் பெயருடன் கள்ள அனுமதிச் சீட்டு கொண்டு, ஸ்பெயின் வழியாக ஃபிரான்ஸ்-ஜெர்மன் பிரதேசங்களைக் கடந்து, மாஸ்கோ சென்றடைந்து, லெனினைச் சந்தித்தார். ஆசிய கீழ் நாட்டு விவகாரங்களில், ராய் லெனினுக்கு வலது கரம்போல் துணையாக இருந்து வந்தார்.

கம்யூனிஸ்டு அகிலத்தில் அவர் குறிப்பிடத்தகுந்த ஒரு உறுப்பினராகவும், கம்யூனிஸ்டு அகிலத்தின், கீழ் நாட்டுத்துறைத் தலைவராகவும் இருந்து பணிபுரிந்திருக்கிறார்.

எட்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் லெனின், டிராட்ஸ்கியோடு கம்யூனிஸ்டு அகில செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகவும் ராய் செயலாற்றியுள்ளார்.

சீனாவில், பொதுவுடைமைப் புரட்சியை ஊக்குவிப்பதற்காக ரஷ்யாவின் சார்பில் ராய் 1927-ல் சீனாவுக்கு அனுப்பப்பட்டார்.

காலனி தத்துவத்தில் ஏற்பட்ட கருத்துவேற்றுமையின் காரணமாக, ராய், ரஷ்யப் பொதுவுடை

குழுவினரின் அதிருப்திக்குப் பாத்திரமானார். ராய் அவர்களின் வாழ்க்கையில் அந்தச் சம்பவம் ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது.

1922-ல் 'வான்கார்ட்' என்ற இதழையும், 1928-ல் 'மாசஸ்' என்ற இதழையும் ராய் நடத்தினார்.

1927-ல் மாஸ்கோவில், கீழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தை நிறுவி, அதன் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் புரட்சியை உண்டுபண்ண, ராய், மாஸ்கோவில் இருந்த காலத்தில் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்.

1914-ல் இரகசியமாக இந்தியாவை விட்டு வெளியேறிய ராய், மீண்டும் இரகசியமாகவே இந்தியாவில் 1930-ல கால் வைத்தார். ஓராண்டுக்குப்பிறகு பம்பாய் நகரில் ராய், போலீஸாரால் கைது செய்யப்பட்டார். மீரத் சதி வழக்கில் அவர் தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 6 ஆண்டு சிறைவாசம் கொடுக்கப்பட்டது. ஆனால், மீரத் சதி நடந்த 1924-ல், ராய், இந்தியாவிலேயே இல்லாமல் ரஷ்யாவில் இருந்து வந்திருக்கிறார்.

ஆறு ஆண்டினை சிறையில்கழித்துவிட்டு, 1937 நவம்பர் 23-ந் தேதி அவர் விடுதலை அடைந்தார்.

சிறையிலிருந்து ராய் விடுபட்டதும் காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசின் செயலாளர் பதவியை ராய்க்குக் கொடுக்க காங்கிரஸ் தலைவர்கள் வலிய முன் வந்தனர். ஆனால், அப்பதவியை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

காங்கிரசில் சேர்ந்த அந்த நாளே காந்தியார் அவர்களிடம் ராய் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார். அன்று மாலைப் பிரார்த்தனைக்கு ராய் அவர்களை காந்தியார் உடன் வர அழைத்தார்; ராய் கண்ணியமாக மறுத்து விட்டார்.

ராமகார் காங்கிரஸ் தலைவர் தேர்தலில், அபுல் கலாம் ஆசாத் அவர்களுடன் போட்டியிட்டு அவர் தோல்வி கண்டார்.

1940-ல் காங்கிரஸ் கட்சியை உதறித் தள்ளிவிட்டு, ராடிகல் டெமாக்ராடிக் கட்சியையும், இந்தியன் பெடரேஷன் ஆஃப் லேபர் என்ற தொழிற் சங்கத்தையும் துவக்கினார். சென்ற யுத்தத்தில் பாசிசம் வெற்றி பெற்றால் உலகில் எங்கும் ஜனநாயகம் அழிந்துபடும் என்று தகுந்த காரணம் காட்டி, இந்திய சர்க்காரின் போர் முயற்சிக்குத் தீவிரமாக ஆதரவு கொடுத்தார்.

அதன் பிறகு, முதன் முதலாக, இந்தியத் துணைக்கண்டத்துக்கென சிறந்ததொரு பொருளாதார திட்டத்தை 'பீபிள்ஸ் பிளான்' என்ற பெயரில் உருவாக்கின பெருமை முழுதும் ராய் அவர்களையே சேர்ந்ததாகும்.

1950-ல் தனது அரசியல் கட்சியையும் கலைத்துவிட்டு, மார்க்ஸ் தத்துவத்திலும் தனது அரசியல் கருத்து மாறுபட்டது என்றும், முற்போக்கானது என்றும் அவர் அறிவித்தார். அந்தத் தத்துவத்திற்குத்தான் அவர் 'நியூ ஹூமானிசம்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ராய் 17 மொழிகளைக் கற்றுணர்ந்த மேதை. ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்யன் ஆகிய மொழிகளில் அவர் நூல்கள் இயற்றியுள்ளார்.

அவருடைய நூல்களில் சிறந்தவையாக உள்ளவை 'சீனாவில் புரட்சியும் எதிர் புரட்சியும்,' 'இரஷ்யப் புரட்சி,' 'மறுமலர்ச்சி,' 'மெடீரியலிசம்' போன்றவையாகும். மற்ற நூல்களும் அறிவுத் துறையில் குறைந்தவை அல்ல.

இந்திய மறுமலர்ச்சி சங்கத்தைக் கண்டு, அதனைக் கட்டிக்காத்து வந்தார். 'ராடிகல் ஹூமானிஸ்ட்' என்ற ஆங்கில வார இதழுக்கும் 'ஹூமானிஸ்ட் வே' என்ற முத்திங்கள் முறை ஆங்கில இதழுக்கும் ராய் ஆசிரியராக இருந்தார்.

எம். என். ராய் அவர்கள் அறிஞர்களுக்கெல்லாம் அறிஞராய்த் திகழ்ந்தவர். பரந்த உலகில அறிவும், விஞ்ஞானப் பேரறிவும், வரலாற்றுப் புலமையும் வாய்க்கப்பெற்றவர் ஒரு ராய் மறைந்தாலும், தம்மைப் போன்ற பல ராய்களை இந்தியத் துணைக் கண்டம் முழுதும் உருவாக்கி வைத்துள்ள பெருமை அவருக்கு என்றும் உண்டு.

அவருடைய இயற்கை பெயர் நரேந்திரநாத் பட்டாச்சாரியா என்பதாகும்.

1952-ல் சறுக்கி விழுந்து கால் எலும்பு முறிவின் காரணமாகப் படுக்கையில் படுத்தவர், முழுக் குணம் பெற்று மீண்டும் அறிவுப் பணிபுரிய ஒருவாய்ப்புப் பெறாமலே, 25-2-54, இரவு 11-50-க்கு டேராடூனில், தமது 61-வது வயதில் மரணமடைந்தார்.

பிள்ளையார் உடைப்பு.

கீழ்க் கோர்ட் தீர்ப்பை ஜில்லா ஜட்ஜ் ஊர்ஜிதம் செய்து தீர்ப்பளிக்கையில், பின்வருமாறு கூறினார்:- "விக்ரக வழிபாட்டை எதிர்த்து எதிரிகள் பிரசாரஞ்செய்கையில், கணேசர் உருவச் சிலையை உடைத்தனர். அந்த குறிப்பிட்ட உருவச்சிலை அவர்களுடைய சொந்த சொத்து. யாவராலும் அது புனிதமாக கருதப்பட்டதல்ல. கடவுள் நம்பிக்கையில்லாதவர் உருவச்சிலையை உடைப்பது மதத்தை அவமதிப்பதாக கடவுள்மீது நம்பிக்கையுடையவர்கள் கருதமுடியாது ஆகவே எதிரிகளமீது இ. பி கோ 295-வது பிரிவுப்படி குற்றம் சுமத்தமுடியாது. எந்த குறிப்பிட்ட வகுப்பினர் மத உணர்ச்சிக்கும் அவமானம் ஏற்படுத்துவது எதிரிகள் உத்தேச மில்லையாதலால், எதிரிகள்மீது இ. பி. கோ. 295 ஏ. பிரிவுப்படியும் வழக்கு தொடரமுடியாது: பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துவதும் எதிரிகள் நோக்கமல்லவாதலால் இ.பி.கோ. 504 பிரிவுப்படியும் வழக்கு தொடரமுடியாது, ஆகவே மனுவை தள்ளுபடி செய்கிறேன்."

அவருடைய மருத்துவச் செலவிற்காக குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், தனது தலைவர் நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் தருமாறு உத்தரவிட்டிருந்ததை அனைவரும் அறிவர்.

●●●

பொன் மொழிகள்

ஆராய இயலாதவன் குருடன்; ஆராய மனமில்லாதவன் மடையன்; ஆராய அஞ்சுபவன் அடிமை.

—வில்லியம் பெர்னார்டு.

மாறுதல் கண்டதும் மாறும் அன்பானது அன்பன்று.

—ஷேக்ஸ்பியர்.

கேடு வந்தபோதும் ஒருவகை நன்மையுண்டு; அக்கேடு, நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்ப்பதோரு கோலாகும்.

—திருவள்ளுவர்.

அன்பில்லாத தொடர்பு உறவுமாகாது, நட்புமாகாது.

—கூடலூர் கிழார்,

நமது வீடு, மெய்யாகவே வீடாகவேண்டுமாயின்; வீட்டில் உள்ள பெண் கல்விகற்று, அறிவு நிரம்பியவளாதல் வேண்டும்.

—ஈ. ச. வித்யாசாகரர்.

பசியைக் காட்டிலும் கொடிய நோய் உலகில் வேறொன்றும் இல்லை.

—ஔவையார்.

நண்பரின் குறைகளை மறந்துவிடு. பகைவரின் குணங்களை நாடு, அதனால் உனக்கு நன்மையுண்டு.

—கதே.

உண்மை, அறிவு, ஆனந்தம் இம்மூன்றின் சொரூபமே ஆண்டவன்.

—அகத்தியர்.

முடிவில் பிரதானமானது; நாம் நினைப்பது எது, அறிவது எது, நம்புவது எது என்பதன்று; நாம் செய்வது எது என்பதேயாகும்.

—ரஸ்கின்.

கீழ்த்தரமான கபடத்தினால், உலகில் ஒரு பெரிய காரியத்தினையும் செய்ய முடியாது.

—விவேகானந்தர்.

நகைச்சுவை என்பது உங்களுக்குச் சிரிப்பு மூட்டுவதுதான். எனினும் உயர்ந்த நகைச்சுவை, சிரிப்போடு ஒருதுளி கண்ணீரையும் வரவழைத்து விடும்.

—பெர்னார்ட்ஷா.

மரணத்திற்கு அஞ்சாதவர்களே உயிர்வாழத் தகுதியுடையவர்கள்.

—மெக் ஆர்தர்.

சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே மனிதரில் சிறந்தவன்.

—ஜேம்ஸ் ஆலன்.

கடன்—பசும்புல்லால், நறுமலரால் மூடப்பட்டு; மனிதனைத் தன்னிடம் இழுக்கும் படுகுழி.

—ஜார்ஜ் எலியட்.

ஒருவன், செய்யத்தகாதனவைகளைச் செய்வதாலும் அநீதி செய்கிறான்; செய்யத் தக்கவைகளைச் செய்யாமையாலும் அநீதி செய்கிறான்.

—அ[illegible],

சத்தியமறையின் தப்பறைகள்.

ஆசிரியர்: ஏ. மெத்துசலா.

(முன்தொடர்ச்சி)

ஜலப் பிரளயமானது ஆதாம் சிருஷ்டிப்பிலிருந்து 1656-ம் வருஷத்தில் ஏற்பட்டிருக்கிறது. மெத்தூசலா என்பவனின் வயது 969 என்று பைபிளில் குறிப்பிட்டுள்ளபடி, அவனும் அதே வருஷத்தில் இறந்திருக்க வேண்டும். அவன் இறந்தது ஜலப் பிரளயத்தினாலா, அதற்கு முன்பா என்பது தெரியவில்லை. ஜலப் பிரளயம் ஏற்பட்டு 7 மாதங்கள் 17 நாட்களுக்குப்பின் பேழையானது, அராராத் என்னும் மலைமேல் தங்கிற்றும். இம்மலையானது துருக்கிக்கும், காஸ்பியன் கடலுக்குமிடையேயுள்ள ஆர்மீனியா தேசத்தில் உள்ளது. இதன் உயரம் 16900 அடியாகும். பத்தாம் மாதம் முதல் தேதியிலே மலைச்சிகரங்கள் தென்பட்டனவாம். பேழையானது, அராராத் மலைமேல் தங்குமுன்பே 29141 அடி உயரமுள்ள எவரஸ்டின் உச்சி தெரிந்திருக்க வேண்டுமே. ஆகவே இந்தக் கற்பனைக் கதை, பூகோளம் அறியாத தற்குறிகளால் எழுதப்பட்டதே என்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை.

நோவாவுக்கு முந்தியவர்களில் பலர் 65 வயதில் பிள்ளை பெற்றிருக்க, இவன் மட்டும் 500 வருஷம் பிள்ளையில்லாதிருந்து, அதன்பின் சேர்ந்தாற்போல் சேம், காம், யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெற்றான் என்பது விசித்திரமாயிருக்கிறதென்பதோடு, குமாரத்திகளே கிடையாது என்பதும் வெளியாகின்றது. அந்த மூன்று குமாரர்களுக்கும் மணம் செய்வித்தும், அவர்களில் எவருக்கும் ஜலப்பிரளய காலம் முடியும் வரையில் சந்ததி உண்டாகவேயில்லை. ஜலப்பிரளயத்துக்குப்பின் சேம், காம், யாப்பேத் என்பவர்களின் சந்ததி விருத்தியைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் கடைக்குட்டியாகிய யாப்பேத்தின் வம்ச வரலாற்றை முதலிலும், காமின் வம்ச வரலாற்றை இரண்டாவதாகவும், மூத்தவனாகிய சேமின் வம்ச வரலாற்றைப் பற்றி கடைசியிலும் கூறப்பட்டிருப்பது தலைகீழ்ப்பாடமாயிருக்கிறது. மேலும், ஆதி 10, 22-ம் வசனத்தில், சேமுக்கு ஏலாம், அசூர், அர்பக்சாத், ஆராம் என்னும் குமாரர் பிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 11 ஆதி 10-ம் வசனத்தில், ஜலப்பிரளயம் உண்டாகி இரண்டு வருஷத்துக்குப்பின், சேம் என்பவன் அர்பக்சாத்தைப் பெற்றதாக எழுதப்பட்டிருக்கிறது. அவனுக்குமுன் ஏலாம், அசூர் என்பவர்கள் எப்போது பிறந்தார்கள்? என்ன ஆனார்கள்? அவர்களின் அட்டவணை எங்கே? ஏன் விடப்பட்டது? சேமின் கடைக்குட்டியாகிய ஆராமுக்கு, ஊத்ஸ், கூல், கேத்தேர்

மாஸ் என்று சாலு குமாரர்கள் பிறந்ததாக 10 ஆம் அதி 23-ம் வசனத்தில எழுதப்பட்டிருக்க, 11 ஆம் அதி, 17-ம் வசனத்தில், இந்நாள் வரையும் செருடைய குமாரராகவே குறிக்கப்பட்டிருப்பதின் விவரம் யாதோ?

பாபேல் கோபுரம்.

அக்காலத்தில் பூமியெங்கும் ஒரேவிதமான பாஷையும், பேச்சும் இருந்ததாம். அதன பலரும் எல்லோரும் கூடி, ஒரு நகரத்தையும் வானத்தையளாவும்படியான கோபுரத்தையும் கட்டி, தங்களுக்குப் பேருண்டாக்க எண்ணி கோபுரத்தையும் கட்டத் துவக்கியபின் கடவுளுக்குத் தபால் போய், அதைப் பார்ப்பதற்கு வானத்திலிருந்து பூமிக்கு இறங்கினாராம். உடனே அவர்கள் முயற்சி கைகூடாமற் செய்வதற்கு, பாஷையைத் தாறுமாறாக்கி பூமியெங்கும் சிதறப் பண்ணினாராம். இது கடவுள் செய்த முட்டாள்தனமான பலவித அக்கிரமச் செயல்களில் ஒன்றாகும். இது ஜலப்பிரளயத்துக்குப் பிறகு சற்றேறக் குறைய 130 வருஷத்துக்குள் நடந்த சம்பவமாகும். இந்த 130 வருஷ காலத்தில், உலகத்தில் ஜனத்தொகை எந்த அளவுக்குப் பெருகியிருக்க முடியும்? 30 நாட்களுக்கொரு தடவை பல குட்டிகள் போடும் மூய இனத்தைச் சேர்ந்தவர்களா அக்கால மக்கள்? அப்படியே அவர்கள் வருஷத்துக்கொருதடவை இரட்டை இரட்டையாகப் பெற்று, பெற்றவர்களில் எவரும் சாகாமலிருந்தாலுங் கூட அவர்களுடைய தொகை சுமார் ஆயிரத்துக்கு மேலிருக்க முடியாது. இதில் சிறுவர்களையும் வயோதிகரையும் நீக்கினால், மீதமுள்ளோர் தொகை 200 தான் இருக்கும். இச்சிறு தொகையினர் சேர்ந்து, சிலநூறு அடிகளுள்ள கோபுரத்தைத்தான் கட்டியிருக்க முடியும். இவ்வித முயற்சி தவறு என்பதாக எந்த அடிமுட்டாளும் கூறத் துணியான். ஆனால் மகா மகா மகோன்னத மாட்சிமை தங்கிய சர்வ சக்தியுள்ள கடவுளுக்கு (உண்மையில் மூடனும் குறும்புக்காரனும் போக்கிரியுமான கடவுளுக்கு) சகிக்க முடியாத பொறாமையைக் கிளப்பிவிட இவ்வித அலங்கோலத்தைச் செய்திருக்கிறார்!

(தொடரும்)

அறிவே அடிப்படை.

அறிவால் அன்புள்ளமும், அன்பால் நேரான எண்ணங்களும், இவற்றல் கல்வி நிறைந்த மனிதர்களும், அவர்களால் இன்பம் நிறைந்த குடும்பங்களும், அவைகளால் ஒழுங்கு நிறைந்த மக்கட் சமூகமும், அதனுல் அமைதியான உலகும் உண்டாகும்.

—கோன் புத்சன்.

---

21. கடவுளே! கண்ணில்லையா?

சொல்லிச் சென்றவண்ணம், அன்பு முத்தம்மையின் நோய்க்கு, வெகு சிரத்தையோடு மருந்துகள் தயாரித்தான் சின்னத்துரை. சித்த மருத்துவ நூல்கள் பலவற்றைப் புரட்டினான். தமிழ்நாட்டின் சிறந்த மூலிகைகள் பலவற்றைத் திரட்டினான், கடைச்சரக்குகளையும் சேர்த்தான், அரிய முறையில் குளிப்புத் தைலமும், பயனுள்ள லேகியமும் தயாரித்துக்கொண்டு வந்தான், அருமை அண்ணியாருக்கு.

இரவு 8-மணி இருக்கும். வாசலில் நின்ற வேலைக்காரன் சிங்காரம் வரவேற்றான் சின்னத்துரையை. "அன்னைக்கு நீங்கவந்திட்டு போனதிலேருந்து, அம்மாவுக்குக் கொஞ்சம் தேவலாமுங்க!" என்று முகமன் கூறி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டான்.

"அப்படியா? சந்தோஷம்" என்று சொல்லிய வண்ணம், அண்ணியார் படுத்திருந்த கூடத்திற்குச் சென்றான். படுக்கையிலே கிடந்த முத்தம்மை அரவம் கேட்டு விழித்துப்பார்த்தாள். "அண்ணி!" என்று அன்போடு அழைத்தான். 'வா தம்பி, மருந்து கொண்டுவந்திட்டியா?" என்று ஆர்வத்தோடு வினவினாள் முத்தம்மை. மெதுவாக எழுந்து படுக்கையிலே உட்கார்ந்தாள்.

தான் கொண்டுவந்த தைல பாட்டிலையும், லேகியக் குப்பியையும் அருகே வைத்துவிட்டு, உட்கார்ந்தான் சின்னத்துரை. அண்ணியாரின் நாடியைப் பார்த்தான். பின்னாலேயே வந்த சிங்காரம், "இலே, தேன் ஏதாவது வேணுமா?" என்று கேட்டான். "ஒன்றும் தேவையில்லே" என்று சொல்லியவண்ணம் சின்னத்துரை, லேகியத்தில் கொஞ்சம் எடுத்து உருட்டி, "இந்த அளவில் காலையும், மாலையும் உணவுக்குப்பிறகு சாப்பிடுங்கள். வாரம் இருமுறை இந்தத் தைலம் தேய்த்துக் குளியுங்கள் அண்ணி!" என்று சொல்லி, முத்தம்மையின் கையில் லேகியத்தைக் கொடுத்தான், வாங்கி வாயிலிட்டுச் சுவைத்தாள் முத்தம்மை. அவள் அகம் குளிர்ந்தது.

"எப்படி அண்ணி இருக்கிறது?" கேட்டான் சின்னத்துரை,

முகமலர்ச்சியோடு முத்தம்மை சொன்னாள்: "மருந்து வாய்க்குச்

சுவைதருகிறது. மருத்துவத் தொழிலில் திரும்பிவிட்ட உன் ஊக்கம், மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது." என்று

'எல்லாவற்றிற்கும் உங்கள் அன்புதான் காரணம்" என்றான் சின்னத்துரை.

"தம்பி! சாப்பிட, குளிக்கவோ கொள்ள உனக்கு வசதி இருக்காதே, விரைவில் கல்யாணம் செய்து கொண்டால் நன்றாயிருக்குமே!" என்றாள் முத்தம்மை.

இவ்வளவு சுலபமாக அண்ணி இதைச் சொல்வார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. சற்று திக்குமுக்கலாடினான். கல்யாண சம்பந்தமாக அவன் மனதிலே உறைந்து கிடந்த ஆசை, அண்ணியாருக்குத் தெரிய வேண்டுமென்று பொங்கிக்கொண்டு வெளிப்பட்டது. சின்னத்துரை சொன்னான்: "அந்தக் குறையொன்றும் பிரமாதமில்லை. என்றாலும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்றே நானும் விரும்புகிறேன். ஆனால்...." இழுத்தான்.

இடையிலே குறுக்கிட்டாள் முத்தம்மை; "என்ன ஆனால்? வயசு வந்துவிட்டது தம்பி. நீ ஒழுக்கம் தவறாதவன் என்பது எனக்குத் தெரியும், ஊராருக்குத் தெரியாதே! பல விதமாகப் பேசுவார்கள். உனக்கென்று ஒருத்தி பிறந்திருப்பாள், பார்த்து சீக்கிரம் முடித்துக் கொள்ளப்பா! நானோ, உனது அண்ணனோ பெண் பார்த்து உனக்கு மணம் முடிப்பதுதான் முறை, ஆனால் இவர் அதைச் செய்வாரென்று நான் நம்பவில்லை" இவ்வாறு சொல்லி பரிவத்தோடு அவன் முகத்தை நோக்கினாள் முத்தம்மை.

சட்டென்று அவன் சொன்னான்; "அந்த வாய்ப்பு எனக்கில்லையென்பதை உணர்ந்திருக்கிறேன் அண்ணி" என்று, மேலும் ஏதோ சொல்ல முயன்றான். சொற்கள் தொண்டையிலேயே நின்றுவிட்டன. கூடத்திற்குள்ளே வந்துகொண்டிருந்த அண்ணன் அருளம்பலத்தையும், அவர் பின்னால் செம்பவளத்தையும் பார்த்ததும் கல்லாகச் சமைந்தான் சின்னத்துரை! ஆயாசமும் ஆத்திரமும் கொண்டு கண்ணை மூடினாள் முத்தம்மை! அவளால் பார்க்கவே முடியவில்லை அந்தக் காட்சியை.

சற்றும் எதிர்பாராமல் சின்னத்துரையை அங்கே கண்டதும், நெருப்பை மிதித்துவிட்டவன் போல துள்ளித்துவண்டு நின்றாள் செம்பவளம். மனதிற்குள் சற்று குழப்பமே என்றாலும், ஒருகணத்தில் எல்லோரையும் கடைக்கணித்துவிட்டு, ஒரு சிரிப்பு சிரித்தார் அருளம்பலம். முறைத்துப் பார்த்தார் சின்னத்துரையை. கடுமையாகக் கேட்டார்: "என் வீட்டில் எதற்கடா நுழைந்தாய் அயோக்கியப்பயலே?"

"அண்ணிக்கு வைத்தியம் செய்ய" என்றான் சின்னத்துரை.

"அண்ணிக்கு வைத்தியம் செய்யவா? அவளோடு கொஞ்சிக் குலாவவா?" என்று கொதித்தார் அவர்.

சின்னத்துரையின் முகத்தில் இருள் சூழ்ந்தது. வேதனையோடு செவிகளை பொத்திக்கொண்டு எழுந்தான்; அடிவயிற்றினின்றும் முளைத்துக் கிளைத்த ஆத்திரத்தை அடக்கிக்

கொண்டு, "அண்ணா!" என்றான். அவன் குரல் தழுதழுத்தது.

அருளம்பலத்தின் மனம் இறுகிற்று. "அண்ணனாவது, தம்பியாவது, போ வெளியே! நீ மானமுள்ளவனாயிருந்தால், இந்த வீட்டில் நுழைந்திருக்கவே மாட்டாய். போடா நாயே! போ!" இரைந்து கத்தினார் அருளம்பலம்.

பொறுக்க முடியாத வேதனையோடு, வேலால் குத்துண்ட வேங்கையாக, வெளியே சென்றான் சின்னத்துரை. மூடிய கண் திறக்கவில்லை முத்தம்மை, கவிழ்த்த தலை நிமிரவில்லை செம்பவளம், குன்றிப்போய் நின்றிருந்தான் வேலைக்கார சிக்காரம். ஒரு கணம், சுடுகாட்டு அமைதி நிலவிற்று அங்கே.

தான் வெறுக்கின்ற தம்பியைத் தன் வீட்டில் இவள் ஏன் சேர்க்க வேண்டும் என்ற ஆத்திரமும், கோபமும் மூர்க்கமாகக் கிளம்பின அருளம்பலத்திற்கு, எனவே மனைவியை நோக்கிக் கத்தினார் மீண்டும்! "முத்து! நீ என்னை மனிதனாக நினைத்திருந்தால், என் பகைவனை வீட்டிற்குள் விட்டிருப்பாயா? பேசியிருப்பாயா அவனிடம்? அடங்காப்பிடாரி! என் மானமே மடிகிறதேடி உன்னால்!"

எவ்வளவோ பொறுத்துப் பார்த்தும், முத்தம்மையின் மனம் கேட்கவில்லை. நோயால் நலிந்திருந்தும், ஆத்திரத்தால் அவள் உடம்பிலே புதிய பலம் தோன்றியது. வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். தன் நிலை மறந்தாள். தன்னை மறந்தாள், எதிர்பாராத உணர்ச்சி வேகத்தோடு பேசினாள்: "ஆமாம். சின்னத்துரையை வீட்டிற்குள் விட்டேன், பேசினேன், கொஞ்சிக் குலாவினேன். ஆம்! நான் விபசாரமே செய்தேன்! நீங்கள் ஊரிலிருக்கும் தட்டுவாணிகளையெல்லாம் இப்படி இழுத்துக் கொண்டு திரியும்போது, நான் மட்டும் ஏன் யோக்யமாக இருப்பேன்? இந்த முண்டச்சியின் உறவால் மடியாத உங்கள் மானமா என்னால் மடிந்து போகிறது?" கேட்டாள் ஆவேசமும், ஆத்திரமுமாக!

"சிறுக்கி! இவ்வளவுக்குத் துணிந்து விட்டாய்?" பதற்றத்தோடு கேட்டார் அருளம்பலம்.

எழுந்து நின்றாள். "ஆம்! இனி எதற்கும் துணிந்துவிட்டேன்!" முத்தம்மையின் வாயினின்றும் வெடித்தன சொற்கள். கோப நெருப்பால் தாக்குண்டு துடித்தார் அருளம்பலம். செம்பவளத்தின் எதிரில் அவள் இவ்வாறு பேசியது, தனது மானம், மதிப்பு, பெருமை எல்லாவற்றையும் துண்டந்துண்டமாக வெட்டி, பொடிப்பொடியாக அரைத்துத் தூளாக்கிக் காற்றிலே பறக்கவிட்டது போலாயிற்று அவருக்கு. சினம் பொங்கி எழுந்து அறிவுக் கண்ணை அவித்தது. ஆத்திரத்தோடு கையை ஓங்கினார். பளாரென்று அறைந்தார் முத்தம்மையின் கன்னத்தில். பலத்த அடி! மீண்டும் அடிக்கக் கையை ஓங்கினார்! கோழிக்குஞ்சுபோல் சுருண்டு விழுந்துவிட்டாள் முத்தம்மை!

"ஐயோ!' என்று அலறினாள் செம்பவளம். "எசமான்!" என்று பதைத்தான் சிக்காரம்.

'வேடன் கையம்பால் தாக்குண்ட மான்குட்டிபோல் மடங்கி விழுந்த

முத்தம்மைக்கு பேச்சு மூச்சில்லை. ஜன்னி வந்ததுபோல் கைகால்கள் இழுத்தன. கர்ர்ர்ரென்று ஒருகோர சப்தம். முத்தம்மையின் மெலிந்த உடலை விட்டு, அந்த உத்தமியின் உயிர் பிரிந்தது!

"ஐயோ! என்ன காரியம் செய்து விட்டீர்கள்? உயிர் போய்விட்டதே! கொன்று விட்டீர்களே உங்கள் மனைவியை!" என்று துடித்தான் செம்பவளம். திகிராமை பிடித்தவராய் விழித்தார் அருளம்பலம், அவள் உடலைப் புரட்டினார், மூக்கில் கை வைத்துப் பார்த்தார், சந்தேகமில்லை; முத்தம்மை பிணமானாள்! மின்வெட்டுப்போல் தோன்றியது அவர் மூளையிலே ஒரு யோசனை. "கிங்கரா!" என்று கூப்பிட்டார்.

"ஐயோ எசமான்!" என்று துடித்தான் வேலைக்காரன்.

"ஓடு! ஓடு! நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ, சின்னத்துரை முத்தம்மாளைக் கொலை செய்துவிட்டான்: உடனே வாருங்கள் என்று கூப்பிடு. நான் வீட்டிலிருப்பதாகவும், அவன் ஓடிவிட்டதாகவும் சொல்லு; போ! போ! உடனே அவசரமாகப் போ!" என்று கட்டளையிட்டார். ஓடினான் வேலைக்காரன் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி.

எதிர்பாராத கோர நிகழ்ச்சியும், அருளம்பலம் தான் தப்புவதற்காகச் செய்யும் விபரீத முயற்சியும் கண்டு மனம் பதறி, புத்தி மருண்டு, செம்பவளம் விலவிலத்துப் போய்விட்டான். இதனால் சின்னத்துரைக்கு வரும் பேராபத்தை எண்ணினான் ஒருகணம்; பொங்கிற்று வேதனை "ஐயோ!" சின்னத்துரையா கொலை செய்தார்? பழியோரிடம் பாவமோரிடமா? கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?" என்று கதறினான் செம்பவளம்.

"சட்! மூடு வாயை. இங்கு நடந்ததையெல்லாம் நீ மறந்துவிடவேண்டும். இதைப்பற்றி வெளியே மூச்சு விடக்கூடாது; கடவுள், நியாயம் தர்மம் என்று புலம்பிக்கொண்டிருந்தால் நான் தப்பமுடியுமா? இதிலே என் சொல்லை மீறி நடந்தால், உன்னை ஒழித்தேவிடுவேன்! ஜாக்கிரதை!" பயங்கரமாக மிரட்டினார் அருளம்பலம். அவரது கண்கள் இரத்தம் போல் சிவந்திருந்தன.

செம்பவளத்தின் மனம் மருண்டது. அச்சத்தால் உடம்பு வெட வெடவென்று நடுங்கிற்று. நோயுற்ற முத்தம்மையைப் பார்க்க விரும்பி, அதற்காக அருளம்பலத்திற்கு ஐநூறு ரூபாயை அழுது, வந்த இடத்திலே சின்னத்துரையின் எதிர்பாராத சந்திப்பு அவனைக் குழப்பிற்று. அருளம்பலம் அவனை வைதது மேலும் மனதை வருத்தியது. முத்தம்மையின் குத்தல் பேச்சு நெஞ்சையறுத்தது. அருளம்பலத்தின் தாக்குதலும், முத்தம்மையின் எதிர்பாராத மரணமும் உள்ளத்தைச் சுக்கு நூறாக உடைத்தெறிந்தன. அதற்குமேல் அருளம்பலம் செய்த அவசரச் சதியும், பயங்கர மிரட்டலும் சேர்ந்து, அவனது ஐம்புலன்களையும் நிலைகுலைய வைத்து விட்டன. கண் பார்வையிழந்தது; பேச நா எழவில்லை. கால்களால் நிற்க முடியவில்லை. ஓய்ந்து ஒடுங்கிப் போய், அப்படியே அசைவற்று உட்கார்ந்து விட்டான் செம்பவளம்.

(தொடரும்)

நாடகம்.

"டி. எஸ். பீ"

"சிந்தனையை உசுப்பும் நிகழ்ச்சிகள், தன்னை அறியாமல்-தனது வலிமையை மீறி-மனிதனது அறிவுத் திடலில் அழியா இடம் பெற்று விடுவது இயல்பு-எளிது.

ஆகவேதான், சமுதாய சீர்திருத்தத்திற்கும், ஒழுக்கத்தின் சிறப்பிற்கும், நாடக அரங்கம் சீரிய செயல் வழிவகுக்கும் என்பதை அறிவுலகம் ஏற்றுக்கொள்கிறது" என்று கோட்டையூரில் நடந்த "டி. எஸ். பீ" நாடக அரங்கத்திற்குத் தலைமை வகித்த சினிமாவசனகர்த்தா, விருதை ந. இராமசாமி குறிப்பிட்டார். இத்துறையில் இளைஞர்களிடையே ஏற்பட்டு வருகிற உணர்ச்சியை வளர்ப்பது பெரியவர்கள் கடமை என்றார். நடிகர் ஸ்ரீ கிருஷ்ணன் நாடகத்தினிடையே இன்னிசை விருந்தளித்தார்.

வானொலியில்

ஆதிரை.

31—1-51, ஞாயிறன்று நண்பகல் 12. மணிக்கு, திருச்சி நிலையத்தில் நடைபெற்ற கதம்ப நிகழ்ச்சியிலே, தோழர், ப. கண்ணன் எழுதிய, "ஆதிரை" என்ற நாடகத்தைச் செவி மடுத்தேன். மகிழ்ந்தேன். பழங்காப்பியத்திலிருந்த ஓர் சிறு நிகழ்ச்சி, பகுத்தறிவுக் கொத்த முறையில் விரிவாகி, தாய் மொழிப்பற்றினை வலியுறுத்தும் வகையிலே புனையப்பட்டிருந்தது. அழகான கலைக் கதை, அமைதியான பேச்சுகள், அவ்வளவையும் சோபிக்கச் செய்தது நடித்தோரின் திறமை. நான் வியப்படைந்தேன்.

ஆதிரையாக நடித்த சோதரியாரின் பேச்சுவன்மையிலே வெளிப்பட்ட உள்ளக் குமுறல், என்னைக் கண்கலக்கவைத்துவிட்டது, சபாஷ்! அந்தப் பதினைந்து நிமிடங்கள் தமிழ் மொழிக்கும் கலைக்கும், தமிழ் ரேடியோநிலையம் தந்த பொன்னான நேரமே! போற்றுகிறேன். இது போன்ற உயர்தர நிகழ்ச்சிகளை, நாடகக்கலை நிலையத்தார் அடிக்கடி சுவைக்கத் தருவார்களா?

—சாந்தி, சேலம்.

நடனம்.

குமாரி ரேணுகா.

நம் நாட்டின் பழம் பெருமைக்குச் சீரிய எடுத்துக்காட்டாக உள்ள பரத நடனக்கலையில், பள்ளிமாணவிகள் எடுப்பான உற்சாகம் காட்டி வருவது வரவேற்கத்தக்கதாகும். இத்துறையில் சிறந்த வெற்றி அடைந்துள்ள குமாரி ரேணுகாவைக் கலைஞர்கள் மனதாரப் பாராட்டத்தவற மாட்டார்கள்." என்று சென்னையைச் சேர்ந்த குமாரி ரேணுகாவின் நடன விழா சிவகாசி நகரில் நடந்தபோது, தலைமை வகித்த சிவகாசி நகர சபைத் தலைவரும்-காளீஸ்வரி கலர்

மேட்ச் ஒர்க்ஸ் அதிபருமான, திரு. ஏ. சண்முக நாடார் குறிப்பிட்டார்.

இசை அரங்கம்.

கலைவாணர்—பாகவதர்.

பீடித்தொழில் மன்னர், முக்கூடல் த பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழில்நிலைய உரிமையாளர், திரு. த பி. சொ. ஹரிராம் சேட் அவர்களைப் பாராட்ட, மதுரை வெற்றிலைபாக்கு பீடி சிகரெட் வர்த்தக மன்றத்தினர், 31-1-54-ம் நாள் சேதுபதி ஹை ஸ்கூலில் ஒருவிழா நடத்தினர். மதுரை நகரசபைத் தலைவர், திரு ஏ சிதம்பரம் தலைமை வகித்தார்.

அன்றிரவு திலகர் மைதானத்தில் திரு. த. பி. சொ. ஹரிராம் சேட் அவர்கள் தலைமையில், இன்னிசை வேந்தன் திரு எம். கே தியாகராஜ பாகவதர் குழுவினரால் இசை விருந்து அளிக்கப்பட்டது. நகைச் சுவை அரசர்; கலைவாணர், திரு. என். எஸ். கிருஷ்ணன் குழுவினர் 'காந்திமகான்' வில்லுப் பாட்டும், 'கிந்தனார்' கதா நிகழ்ச்சியும் நடத்தினர்,

கட்டணம் ஏதுமில்லாததால், பத்தாயிரம் பொதுமக்கள் கூடியிருந்து மகிழ்ச்சி அடைந்தனர்.

மதுரை, பீடி, சிகரெட் மொத்த வியாபாரிகள் சங்கத்தினர், தங்களது சங்கக் கட்டடத் திறப்பு விழாவை நடத்திக்கொடுக்குமபடி பீடித் தொழில் மன்னர், திரு. ஹரிராம் சேட் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவதென்று முடிவு செய்துள்ளனர். இரவு நாடகமும் உண்டாம்!

நாடக—சினிமாக் கலையாக்கத்தில், தி மு. க. வினரின் பயன் தரும் சாதனைகளைக் கண்டு மகிழும் பொதுமக்களோடு, மருளும் பிரகிருதிகளும் உண்டு. அத்தகைய மகிழ்வுக்கும், மருட்சிக்கும் இதோ, மற்றோருபாத்திரம்! இந்தக் கலைஞர் விருதை, ந. இராமசாமி. நாடகத் துறையில் அனுபவம் பெற்றவர். 20-க்கு மேற்பட்ட இயக்கப் புத்தகங்கள் எழுதியவர். நல்ல எழுத்தாளர். இப்போழுது சினிமாத்துறையில் அடியெடுத்து வைக்கிறார். சென்னையில் சேலம் அசோகா பிக்சர்ஸ் எடுக்கும் புதிய படத்திற்குரிய வசனங்களை அருமையாக எழுதியுள்ளார். இவர் எழுதிய தளபதி என்ற நாடகமும் திரைக்கதையாக மாறப் போகிறது. மனமுவந்து வரவேற்கிறோம். வெல்க கலையாக்கம்! வாழ்க கலைஞர்!

திரை அரங்கம்

ஒருநாள்.

ஏ. வி. எம். தயாரிப்பான 'ஒருநாள்' மதுரை மீனாட்சியில் விரைவில் வெளியீடாக வரும் என்று தெரிகிறது. சிவாஜி கணேசன், பண்டரிபாய், சூர்யகலா, முதலியோர் நடித்துள்ள, பொதுமக்களால் துடிதுடிப்போடு எதிர்பார்க்கப்படுகிற இப்படத்தின் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் வினியோக உரிமையை, காரைக்குடி "உமையாள் பிக்சர்ஸ்" பெற்றுள்ளனர்.

மனோகரா.

கலைஞர், மு. கருணாநிதி வசனம் அமைத்துள்ள "மனோகரா"வின் வினியோக உரிமையை, மதுரை "இராதா கிருஷ்ணா பிக்சர்ஸ்" பெற்றுள்ளனர், சிவாஜி கணேசன், டி. ஆர். ராஜகுமாரி, கண்ணாம்பா, எஸ். ஏ. நடராஜன் திறம்பட நடித்துள்ள இப் படத்தை, ரசிகர்கள் பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர், சிங்கநாதம் எழுப்பும் சிவாஜிக்கு, சங்கிலியை அறுக்கும் கட்டம் படமாக்கப்படும்போது காயம்கூட ஏற்பட்டு விட்டதென்றால், படத்தில் உயிர்த் துடிப்பு இடியோசையாய் எக்காளமிடுமல்லவா! ஜெப்டியூனில் தயாரிக்கப்பட்டுள்ள மும்மொழித் தயாரிப்பான இதை, பிரசாத் டைரக்ட் செய்துள்ளார்.

அசோகா பிக்சர்ஸாரின் புதுப்படம்.

"என்தங்கை"யை இருமொழிகளில் தயாரிக்க ஏற்பெயர் கொண்ட "அசோகா பிக்சர்ஸார்". டைரக்டர் திரு. கே. வி. ஆர் ஆச்சார்யா எழுதிய சமூகக் கதையை 'ரேவதி'யில் படமாக்கி வருகின்றனர்

"கலைமாற்றம்" நாவலாசிரியர் விருதை. ந. இராமசாமி இதற்கு வசனம் அமைத்துள்ளார்.

ரஞ்சன், எம். என். நம்பியார், டி. பாலசுப்ரமணியம், துரைசாமி, எஸ். வரலட்சுமி மைனாவதி, கிருஷ்ணாபாய் முதலியோர் நடித்து வருகின்றனர்.

பாவலர். தோ. ப. வேலாயுதசாமி இயற்றியுள்ள பாடல்களுக்கு, மியூசிகல் டைரக்டர் பாண்டுரங்கம் இசை அமைத்துள்ளார். காமிராவை பி எல். ரெங்கா கையாளுகிறார். டைரக்‌ஷன் பொறுப்பை ஆச்சார்யாவும் கமியாகும் கூட்டாக இருந்து கவனிக்கின்றனர்.

இன்னும் பெயரிடப்படாத இப் படம், எல்லாவகையாலும் சிறந்திருக்க அசோகா அதிபர்கள் முன்னேற்ற முறைகளைப் புகுத்தி வருகின்றனர். தமிழில் தயாரிக்கப்படும் இப்படம் தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளிலும் பின்னால் தயாரிக்கப் படலாமாம். முயற்சி வெல்க!

ஆளவந்தார்.

ஆசிரியர், ப கண்ணன் தயாரித்துள்ள "ஆளவந்தார்" எனும் பிரசார நாடகம், சேலம் பகுத்தறிவு கலைக்கழகத்தின் சார்பிலே, 28—2—54-ல் சேலத்தில் அறிஞர், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது, நடிப்பில் இயக்கத் தோழர்கள் பலர் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

கருத்துரை

துருக்கியின் தந்தை.

மடமையும், மதவெறியும் மண்டிக் கிடந்த துருக்கியாக்குப் புதுநெறி காட்டி, புத்துணர்ச்சியளித்தவர் அறிஞர், முஸ்தபா கமால் பாஷா. துருக்கியின் திருத்திய பரம்பரைக்கு அவர் தந்தை என்பதில் ஐயமில்லை. அவரது வரலாற்றினை சுவைபடத் தொகுத்துள்ளார் நண்பர் வி. சிவப்பிரகாசம். வரவேற்கிறோம்.

ஆங்கில முறையைப் பின்பற்றி; நாட்டு நிலை, அரசியல் சூழ்நிலை, சமுதாயக் கட்டுக்கோப்பு, பிரதான நிகழ்ச்சிகள், பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நன்கு எழுதப்பட்டுள்ளது. தெம்பும், தெளிவுமான விறுவிறுப்பு நடை சுருங்கிய நல் விளக்கம். பல நூல்களைப் படித்துச் சேர்த்த தகவல்கள் யாவும் சேர்ந்து, எடுத்ததும் படித்து முடிக்கத் தூண்டுகின்றன. படிக்கவேண்டிய பயனுள்ள புத்தகம், அழகான அட்டை, விலையும் அதிகமில்லை.

இதிலுள்ள சாதாரண இலக்கணப் பிழைகளைத் திருத்தி அச்சிட்டால், இது பள்ளியில் துணைப்பாட புத்தகமாக இடம் பெறலாம்.

(ஆசிரியர்: வி. சிவப்பிரகாசம், B. A. வெளியிட்டோர்: ஔவைப் பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி. பக்கங்கள் 64, விலை 0-10-0)

தி. மு. க. வெற்றி முழக்கம்,

"ஏ......பகுத்தறிவாளனே! பழிக்கும் பழமைதனை ஒழிக்க முடிவு செய்வோய்!—புவிகழைக்குர் ஒழிசி தென்று அழைக்குதறிவுலகமே— உழைத்திடலாம வருவாய்!" என்று முழக்கமிட்டழைக்கும் முதற்பாட்டில் தொடங்கி, "நல்லதோர் கொள்கை கேளடா—தூய காவலர்கள் கண்ட பகுத்தறிவாம தோழா!" என்று இதமாகச் சொல்லும் இறுதிப்பாடல்வரையுள்ள 12 பாடல்களும், இனிக்கும் தமிழ் இசைப் பாடல்கள்.

நடைபெற்ற திராவிடப் போராட்டம் குறித்தும, கொள்கை குறித்தும், புதுமையான சினிமா மெட்டுகளிலே, அழகாகப் பாடல்களைப் புனைந்துள்ளார் தோழர் கலாநேசன். பிரசார வலிமையும், மொழிவளப்பும் பெற்ற நல்ல பாடல்கள். பொதுக்கூட்டங்கள்— இசையரங்குகளில் தங்குதடையின்றி பயன்படுத்தலாம.

(ஆசிரியர்: கலா நேசன். வெளியிட்டோர்: மோகன் பிரஸ் லிமிடெட். 151 செட்டியார் தெரு, கொழும்பு. பக்கங்கள் 24, விலை 0—4—0)

திராவிடத்தில் தீ.

திராவிட இயக்கப் பெருந் தொண்டரும், எழுத்தாளருமாகிய தோழர், விருதை, ந. இராமசாமியின் அரியதோர் சொற்பொழிவின் புத்தகவடிவம். அண்மையில் நடைபெற்ற கிளர்ச்சியும், ஆளவந்தாரின் போக்கும் குறித்த நல்லதோர் விளக்கம். அழகான அட்டைப்படம்.

(ஆசிரியர்: விருதை, ந. இராமசாமி. வெளியிட்டோர்: நதிபதிப்பகம், மதுரை. பக்கங்கள் 24, விலை 0-4-0)

182336
சென்னை-600 008

பதவி வேட்டை.

காங்கிரஸ் கட்சிக்குள் நடைபெறும். பதவி வேட்டைப் போராட்டத்தின் ஒரு அத்தியாயம். கொல்லைப்புற முதலமைச்சர் ஆச்சாரியார், கொதிக்கும நெஞ்சரான தோழர் காமராஜரை நோக்கிக் கேட்பது போன்ற, ஒரு அரசியல் சூழ்ச்சி விளக்க நடைச் சித்திரம். விலை சற்று அதிகந்தான்.

(ஆசிரியர்: மதுரை மன்னன் வெளியிட்டோர்: நதிப்பதிப்பகம, மதுரை. பக்கங்கள் 20, விலை 0-4-0)

சௌபாக்கியம்.

மாதர்நல, மாத இதழ். "சௌபாக்ய" த்தின் இவ்வாண்டின் பொங்கல்மலர். சென்ற ஆண்டினைப் போலவே சிறப்பாக அமைந்துள்ளது. கலையுணர்வுள்ள பலவகைச் சித்திரங்கள், புகைப்படங்கள் ஏராளம். குடும்பங்களுக்கு – பெண்களுக்குத் தேவையான கட்டுரைகள், குறிப்புகள் பல இடம பெற்றுள்ளன. அழகான பாடல்கள், கவிதைகள்—சுரப்படுத்திய கீர்த்தனையும உண்டு. மனதைக் கவர்ந்து, அறிவைப் பெருக்கும் சிறுகதைகள் மலருக்குரிய தனிச் சிறப்பு.

மயிலை, சீனி — வேங்கடசாமி, பா. சொக்கலிங்கம், எம். எஸ். கமலா, குஞ்சிதப்—வடிவேலு, பேராசிரியர், சி. ஆர். மயிலேறு, கோ. ப. வேலன், எஸ் சீதாலட்சுமி ஆகியோரின் கதை, கட்டுரைகள் போற்றத்தக்கவை. இரவுன் 1×4 அளவில் 124 [illegible] பானதான். விலை எட்டணாவே!

"சௌபாக்கியம"மலிவான விலையில் கிடைக்கும ஒரு மகத்தான இதழ். தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் "சௌபாக்யம்" பெற வேண்டும. பயனடைய வேண்டும். அலுவலகத்தாரும் விற்பனை முறையை விரிவாக்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

(வெளியிடுவோர்: மாதர் நல இலாக்கா கெ.7. ஆராவமுது கார்டன் தெரு, எழும்பூர். சென்னை–8 மாத இதழ் ஆண்டுக் கட்டணம் ரூ 2-0-0)

தமிழோசை.

கடல் கடந்த நாட்டினின்று துன்பக் குரல் எழுப்பும் திங்கள் வெளியீடு. "தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும வகை செய்தல்வேண்டும்" என்ற பெரும் குறிக்கோளிலே முளைத்துள்ளது கண்டு மகிழ்கிறோம். தக்க பயன் விளைக்கும் கலைத்தமிழ் செல்விதனை வரவேற்கிறோம! வாழ்த்துகிறோம்.

(ஆசிரியர்: சோ ஐ. துரை, திங்கள் வெளியீடு. "தமிழோசை" தபால் பெட்டி கெ 4009 சிங்கப்பூர். சந்தா 5-00 தனிப்பிரதி 0-40)

எங்கள் உழைப்பு, தியாகம், துயரங்களுக்கெல்லாம், நாங்கள் விரும்பும் பரிசு தாய் நாட்டின் விடுதலையே.

—சுபாஷ்சந்திரபோஸ்.

பகுத்தறிவு வெளியீடு.

காந்தியார் நினைவுச் சின்னம்.

★ வேலூரில், காந்தியார் சிலைத் திறப்புவிழாவில் அறிஞர், அண்ணா அவர்களாற்றிய அரிய சொற்பொழிவு

★ அனைவரும் படித்துணர வேண்டிய கருத்துரை, எவரும் வாங்கத்தக்க மலிவுப்பிரசுரம்.

விலை 0-2-0

ரூபா 2-8-0 முன்பணம் அனுப்புவோர்க்கு, 25 பிரதிகள் அனுப்பப்படும்.

பகுத்தறிவு அலுவலகம், சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

கெங்கா பிரதர்ஸாரின்

உயர்தரமான காய்கறி வத்தல் ருசிகரமான கத்தரிவத்தல், வெண்டைக்காய் வத்தல், மோர்மிளகாய் வத்தல், சுண்டைக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், பிதுக்கு வத்தல், வடகம் முதலியன எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்:

ஏஜெண்டுகள் தேவை,

எழுதுக

கெங்கா பிரதர்ஸ்,
(பேபி சர்பத் தயாரிப்பாளர்கள்)
மாரியம்மன் கோவில் தெரு.
விருதுநகர்.

தந்தி: விஜித்திரா.
தபால் பெட்டி. 48.

பகுத்தறிவு

அறிவியல் திங்கள் வெளியீடு

உள் நாடு:
ஆண்டுக் கட்டணம் 3-0-0
தனிப்படி 0-4-0

வெளி நாடு:
ஆண்டுக் கட்டணம் 4-8-0
தனிப்படி 0-6-0

இலங்கையில் 25 சதம்

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.